# கோபதி

## சிறுகதைகள்

வெளியீடு:

யாழ் இலக்கிய வட்டம்,
யாழ்ப்பாணம்.

# கோபதி
# சிறுகதைகள்

ப. தெய்வேந்திரன்
(கோபதி)

வெளியீடு:

யாழ் இலக்கிய வட்டம்,
யாழ்ப்பாணம்.

நூல் : கோபதி சிறுகதைகள்

நூலாசிரியர் : ப. தெய்வேந்திரன்

முதற்பதிப்பு : 15, ஜனவரி 2008

அளவு : 1/8 திமை 14.3cm x 22.2 cm

பக்கம் : vi + 84

வெளியீடு : யாழ் இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.

அச்சகம் : பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

விலை : 150/=

# என்னுரை

எனது பள்ளிப்பருவத்தில் எழுத்துலகு பற்றிய எண்ணமோ ஈடுபாடோ இல்லாத நான் நிரந்தர தொழில் வாய்ப்புப்பெற்று, கொழும்பில் வாழ்ந்து வந்தபோது எழுத்துலகில் பிரவேசிக்கத் தூண்டிய சம்பவம் சுவாரஸ்யமானது.

1950 ஆம் ஆண்டு எழுதுவினைஞர் சேவையில் இணைந்த எனக்கு முதல் நியமனம் கொழும்பு காவல்துறைக்குக் கிடைத்தது. சில மாதங்கள் கழிந்ததும் என்னை நுகேகொடவிலுள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (A.S.P) காரியாலயத்துக்கு மாற்றி விட்டார்கள். அங்கும் சில மாதங்கள் வேலைசெய்து கொண் டிருக்கும் போது, ஒரு நாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தனது அறைக்கு என்னை அழைத்து,

"யாரைப்பிடித்து அலுவல் பார்த்தீர், அடுத்தகிழமையிலிருந்து நீர் கௌரவ பிரதம மந்திரிக் காரியாலயத்துக்கு மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றீர் என தொலைபேசி மூலம் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்" என புன்னகை பூத்தவண்ணம் ஆங்கி லத்தில் கூறினார்.

"எனக்கு எதுவும் தெரியாது ஐயா" என நானும் ஆங்கிலத்தில் பதில் கூறியதும்,

"சரி போகலாம்" என அவர் கூறியதும் எனது இருப்பிடத்துக்கு நான் திரும்பிவிட்டேன்,

குறித்த நாள், நான் கௌரவ பிரதம மந்திரிக் காரியாலயத்தில் பிரசன்னமாயிருந்தபோது, பிரதமரின் செயலாளர் என்னை அழைத்து,

"பிரதம மந்திரிக்கு அனுப்பப்படும் தமிழ்க் கடிதங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, எனக்குச் சமர்ப்பித்து, ஆணை பெற்று, குறிப்பிட்ட கடிதத்திற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதென்று, எழுதியவருக்கு தமிழில் பதிலும் அனுப்ப வேண்டும். இதற்காக, தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமையுள்ள ஒரு இலிகிதரை எமக்குத் தரும்படி கேட்டதற்கு திறைச்சேரி உம்மை அனுப்பியிருக்கிறார்கள்"

எனக் கூறியதோடு வேறும் சில அறிவுரைகளை ஆங்கிலத்தில் கூறிவைத்தார்.

அப்பொழுது, இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி ஆக இருந்த திரு. டி. எஸ். சேனநாயக்காவின் காரியாலயம் அது. எனது அதிஷ்டவசமாக, அக்காரியாலய பிரதம இலிகிதர் திரு. நடராஜா என்னும் ஒரு தமிழர். எனக்கு உள்ள தேவைகளையும், குறை நிறைகளையும் திரு. நடராஜா அவர்களுடன் வசதியாகக் கதைக்க முடிந்தது.

நாட்கள் செல்லச்செல்ல, பிரபல வானொலி நாடக எழுத்தாளர் திருமதி பாலாம்பிகை நடராஜாவின் கணவரே எங்கள் பிரதம இலிகிதர் என அறிந்தேன்.

இலங்கை வானொலியில் நாடகத் தயாரிப்பாளராக இருந்த "சானா" என அழைக்கப்பட்ட திரு. சண்முகநாதன் காலத்தில் ஏராளமான வானொலி நாடகங்களை எழுதிப் புகழ்பெற்றவர் திருமதி பாலாம்பிகை நடராஜா.

நாட்கள் கழிய, எனது தமிழ் அறிவையும் உறுப்பான கையெழுத்தையும் கண்டுகொண்ட திரு. நடராஜா அவர்கள், அவரது மனைவி குறிப்புவடிவில் (drafte) எழுதிய நாடகங்களை என்னிடம் தந்து, தெளிவான கையெழுத்தில் அவைகளை எழுதித் தரும்படி கேட்டுக்கொண்டார். அவ்விதம் அநேக நாடகங்களை நான் பிரதி பண்ணிக் கொடுக்கும்போது,

"நல்ல கருக்களை வைத்து நானும் ஏன் வானொலி நாடகங்கள் எழுதக்கூடாது" என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது.

அந்த எண்ணத்தின் முயற்சியே எனது பல வானொலி நாடகங்கள் ஒலிபரப்பப்பட ஏதுவாக அமைந்தது.

1950 ஆம் ஆண்டு தொடக்கம், நான் சொந்தப் பிரதேசத்திற்கு மாற்றம் கோரி, 1964 ஆம் ஆண்டு யாழ் கச்சேரிக்கு மாற்றம் பெற்று வரும்வரை - சுமார் பதினான்கு ஆண்டுகள் நான் பிரதம மந்திரி காரியாலயத்தில் ஆற்றிய கடமையின் தன்மையினால் எனது தமிழ் அறிவு விருத்தி அடைந்ததுடன், எழுத்துத்துறையிலும் பிரவேசிக்க ஆர்வத்தைத் தூண்டியது.

வானொலி நாடகங்கள் ஊடாக எழுத்துத்துறையில் பிரவேசித்த நான், வானொலி நாடகங்களிலும் பார்க்க சிறுகதைகள் மூலம் சமூக சீர்திருத்தங்களையும் படிப்பனைகளையும் ஏற்படுத்துவது சுலபம் என எண்ணியதால் சிறுகதைத் துறையில் அடி எடுத்து வைத்தேன், அந்த முயற்சியில் எனது முதலாவது சிறுகதை "அவசரம்" 1962 ஆம் ஆண்டு ஆடி 15இல் தினகரனில் பிரசுரமானது. அதனைத் தொடர்ந்து, எனது பல சிறுகதைகள் சுதந்திரன், வீரகேசரி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தன. அவைகளிலிருந்து சில சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பெறுகின்றன. அவைகளில் சில, பரிசில்களும் பாராட்டுப் பத்திரங்களும் பெற்றவையாயிருக்கும்.

படித்துப் பாருங்கள். உங்கள் பாராட்டையும் நான் பெற முடிந்தால், நான் அதிர்ஷ்டசாலி. இத்தொகுதியை வெளியிடும் யாழ் இலக்கிய வட்டத்திற்கும், பாரதி பதிப்பக உரிமையாளர் இ.சங்கருக்கும் மனமார்ந்த நன்றியுடையேன்.

*ப. தெய்வேந்திரன்*
*–கோபதி–*

# உள்ளே....


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | அவசரம் | 01 |
| 02. | தவறு | 08 |
| 03. | மானநட்டம் | 16 |
| 04. | மனச்சாட்சி | 23 |
| 05. | மனமாற்றம் | 30 |
| 06. | சாரதாவின் கணவன் | 38 |
| 07. | இரும்புக்கரம் | 45 |
| 08. | உறுதி | 52 |
| 09. | நான் செத்துப் போனேன் | 60 |
| 10. | விடை | 64 |
| 11. | 'லவ்' லேன் | 68 |
| 12. | வேதனைகள் காப்பாற்றப்படுகின்றன | 72 |
| 13. | நிம்மதி அற்ற ஊரில் | 79 |

## 01 — அவசரம்

**(1)**

இணுவில் பிரசவ வைத்தியசாலை எட்வேட் ஞாபகார்த்த வார்டின் இரண்டாம் இலக்க அறைக்கு அட்கள் வருவதும், அங்கிருந்து போவதுமாயிருக்கின்றனர். காரணம், இரண்டு நாட்களுக்கு முன்புதான் பலரின் அனுதாபத்துக்குமுரிய பெண் ணொருத்தி, ஒரு பெண்மகவைப் பெற்றெடுத்தாள். தாயும், சேயும் அவ்வறையில் தான் இருக்கின்றனர்.

அவளுடைய நண்பர்களும், அவளது கணவருடைய நண்பர் களுமாக அநேகர் வருகிறார்கள். போகிறார்கள்: குசலம் விசா ரிக்கிறார்கள் : ஆறுதல் கூறுகிறார்கள். ஆனால் அவைகளுக் கெல்லாம் பதிலாக அப்பெண்ணின் வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளோ "அவர் இன்று இருந்தால்'...." என்பவை மட்டுமே.

இப்பொழுது, சின்னத்தம்பிப் பிரக்கிராசியார் அந்த அறை யில் பிரவேசித்து, அப்பெண்ணிடம் குசலம் விசாரிக்கிறார் அவளுடைய நா, தழ தழக்கிறது. கண்ணீர் மல்கிறது. ஆனால் அப்பெண்ணோ அவருக்கும் அதே பதில் அளிக்கிறாள் : "அவர் இன்று இருந்தால்'...."

அந்த அறையில், ஒரு மூலையில் இரு பெண்கள் காதோடு காதாக "புருசன் செத்த அந்த மாசமே பெட்டை சனிச்சிட்டிது" என்று குசு குசுத்தனர்.

ஒன்பது மாதங்களுக்கு முன் ஒரு நாள் இரவு, "கோமள வாச'' த்தில் தனிமை கோலோச்சுகிறது "புத்" ஆஹா' இரண்டே எழுத்துக்களாலான என்ன அழகான வார்த்தை' இம்மையில் கிடைக்கும் ஒப்பற்ற பரிசு' சே, எந்த முட்டாள் இதை எழுதிவைத்தானோ? மழலைச் செல்வத்திற்காக ஏங்கித் தவிக்கும் நகரவேதனையைவிட மோசமான வேதனையை அவள் "புத்" என்னும் நரகத்தில் அனுபவிக்கப்போகிறாளா? இல்லை. ஒருபோதும் இருக்கமுடியாது' இந்த உலகத்தில் அணுஅணு வாக இறந்து கொண்டிருக்கும் எனக்கு, மறு உலகில் இதிலும் கூடிய வேதனை இருக்கமுடியாது என்று நிச்சயமாகக் கூறுவேன். என்னுடைய நம்பிக்கையைப் பரீட்சித்துப் பார்த்துவிடுகிறேன்'''

இத்தனையும் கோமளாவின் பன்னிரண்டு வருட இல்வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியில் விளைந்த சிந்தனை அலைகள்' தனிமை அவளுடைய சிந்தனைக்கு உருக்கொடுக்க, "சட்" டென்று எழுந்து மேசையை நோக்கி நடந்தாள். கண்கள் எதையோ தேடின. நோட்டுப் புத்தகத்தையும் பேனாவையும் எடுத்து எழுதத்தொடங்கினாள்.

"அத்தான் என்னை மன்னித்து விடுங்கள்' "

"நீ ஏன் வாழவேண்டும்" என்று, எனது மனம் என்னைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கச் சக்தியற்றவளாகிவிட்டேன். இனி மேல் வாழ்வதால் அதைச் செழிப்புறச் செய்வேன் என்ற நம்பிக்கையே அற்றுவிட்டது. நீங்கள் என்மேல் வைத்த அன்பு உண்மையானதென்றால், நீங்கள் நிச்சயம் வாழ்ந்தே தீர வேண்டும். வாழ்ந்தால் மட்டும் போதாது. நீங்கள் இன்னுமொரு பெண்ணை மணந்து, உங்கள் அடி அழியாமல் ஒரு விளக்கேற்றி வைத்து மகிழ்ச்சியாக வாழுங்கள்' நீங்கள் என்மேல் வைத் திருக்கும் பாசத்தை எடுத்துரைக்க எழுத்துக்குச் சக்தி ஏது? எனது உள்ளம் அணுவளவு வேதனையும் அடையக்கூடாதென்று நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாப்பாக நடந்து கொண்டீர் களோ, அவ்வளவுக் கவ்வளவு எனது மனச்சாட்சி என்னைக்

குடைந்து கொண்டே இருந்தது. ஒரு துளி விஷம் எடுக்க எவ்வளவோ முயன்றேன். முடியவில்லை. "யாழ்தேவி" தான் எனக்கு விடுதலை அளிக்கப்போகிறாள். அவளைத் தேடிச் செல்கிறேன். நீங்கள் வேலையிலிருந்து திரும்பும் போது இரவு ஒரு மணி ஆகிவிடுமென்று நினைக்கிறேன். அதற்கிடையில் "யாழ்தேவி" எனக்குச் சாந்தி அளித்துவிடுவாள்'. நான் வருகிறேன். என் வேண்டுகோளை நிறைவேற்றி விடுங்கள். எனது அன்பு முத்தங்கள்.

**உங்கள் கோமளா**

கடிதத்தை மடித்து மேசையில் வைத்துவிட்டு, வாசலில் போய் நின்று திரும்பி வீட்டை ஒரு முறை பார்த்தாள். சுவர் மணிக்கூடு அவளுக்கு விடையளிப்பது போல் பதினொரு முறை அடித்து ஓய்ந்தது.

"ஐயையோ' 'யாழ்தேவி' வந்துவிடப் போகிறதே" என்று எண்ணியவாறு ஓட்டமும் நடையுமாகப் புகையிரதப் பாதையை நோக்கிப்போனாள். கோண்டாவிலுக்கும் இணுவிலுக்குமிடையில் ஒரு வளைவு உண்டு. அந்த வளைவிலுள்ள பாதையில் படுத்திருந்து "யாழ்தேவி' க்குப் பலியாவது என்ற திட்டத்துடன் தான் போய்க்கொண்டிருக்கிறாள். குறித்த இடத்தை அணுகியதும், புகைவண்டி புறப்படும் வரை ஒரு புதரோடு ஒதுங்கிக் கொண்டு நிற்கிறாள்.

சிறிது நேரத்தில், 'யாழ்தேவி' யின் பிரகாசமான விளக்கொளி மரங்களுக்கூடாகத் தென்பட்டது. கோமளா, நொடிப் பொழுதில் தனது மனதைக் கல்லாக்கிக்கொண்டு புகையிரதப் பாதையில் கழுத்தை வைத்துப்படுத்துக் கொண்டாள். புகைவண்டிக்கும் கோமளாவுக்கும் இடையிலுள்ள தூரம் குறுகிக் கொண்டு வருகிறது. ஆனால் பாதையின் வளைவு காரணமாக கோமளா மீது இன்னும் விளக்கொளிபடவில்லை.

இன்னும் சில வினாடிகளில் கோமளாவின் சிரசு உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்டுவிடும். புகைவண்டி நெருங்கி விட்டது.

## (3)

சுகுமார் சுன்னாகம் தபால்கந்தோரில் உதவி அதிபராகக் கடமையாற்றி வந்தான். ஒரு மாதத்தில், ஒரு கிழமைக்கு இரவு நேரத்திலும் பணியாற்றவேண்டிய நியதி அவனுக்கிருந்தது. அந்த ஆறு நாட்களிலும் பக்கத்து வீட்டுச் சின்னத்தம்பிப் பிரக்கிராசியின் தங்கை மங்களம்தான் கோமளாவுக்கு உதவியாகவிருப்பாள். மங்களம் ஒரு விதவை: அவளுடைய கணவன் மணமான ஆறாம் மாதம் மோட்டார் விபத்தொன்றில் சிக்கி இறந்துவிட்டான். சின்னத்தம்பி பிரக்கிராசியைச் சூழ்ந்திருந்த வரட்டுச் சம்பிரதாயம் மங்களத்தை வாழவைக்க விடவில்லை.

அன்றும் சுகுமார் தனது மனைவிக்கு உதவியாக வந்திருக்கும்படி மங்களத்தை ஏற்பாடு செய்துவிட்டுத் தான் போனான். ஆனால் அன்று இரவு பத்துமணியளவில் சின்னத் தம்பிப் பிரக்கிராசியின் மனைவிக்குப் பன்னிரண்டாவது குழந்தை யின் பிரசவவேதனை ஏற்பட்டபடியால், மங்களம் தன்னுடைய வீட்டிற்குச் சென்றுவிட்டாள்.

'விவாகமாகியும் பன்னிரண்டு ஆண்டுகளாகியும் ஒரு குழந்தைக்குத் தன்னும் வழியில்லையே'" என்ற ஏக்கத்தினால், கோமளா தன் உயிரை வெறுத்துவிட்டாள்.

சுகுமாரின் வீட்டிற்கும் சுன்னாகம் தபாற்கந்தோருக்கு மிடையிலுள்ள இரண்டரை மைல் தூரத்தையும் பத்து நிமிடக் கால்நடைத் தூரமாகச் சுருக்கிவிடும் அவனிடமுள்ள 'மோரஸ் மைனர்'.

சுகுமாரின் வேலை இரவு முறையாக வரும்போது, வழக்கமாக இரவு பன்னிரண்டரை மணிக்குத்தான் முடிவடையும். ஆனால் அன்று சுகுமார் தனது சக உத்தியோகத்தர் ஒருவருடன் ஏற்பாடு செய்துகொண்டு, இரவு பதினொரு மணிக்கே கந்தோரி லிருந்து புறப்பட்டுவிட்டான்.

இணுவில் புகையிரத நிலையத்தை அணுகிய சுகுமாரின்

கார், புகையிரதப் பாதைக்கு அப்பால் நகர முடியாமல் நின்று விட்டது. 'யாழ்தேவி' இணுவில் நிலையத்தை கடந்து செல்ல வேண்டிய நேரம் நெருங்கிவிட்டதால், புகையிரதக் கடவைப் படலைகள் சாத்தப்பட்டிருந்ததே காரணம்.

வழக்கமாக, 'யாழ்தேவி' இரவு 10.40 க்கெல்லாம் இணுவில் நிலையத்தை தாண்டிவிடும். அன்று அனுராதபுரத்துக்கும் மதவாச்சிக்குமிடையில் எருமை மாடொன்று பாதையின் குறுக்கே அடிபட்டு விழுந்ததால் ஒரு மணித்தியாலம் தாமத மாகிவிட்டதாம்! இதனால் சுகுமாரும் அப்புகையிரதக் கடவை யில் சுமார் பதினைந்து நிமிடங்கள் காத்திருக்க வேண்டிய தாயிற்று. 'யாழ்தேவி' புகையிரத நிலையத்தையும் கடவையை யும் தாண்டியதும், சுகுமார் தனது காரில் வீடு நோக்கி விரைந் தான்.

வீட்டுக்குள் பிரவேசித்த சுகுமார் மெல்லியதொனியில் 'கோமளா!' என்று கூப்பிட்டதற்குப் பதில் கிடைக்காததால், இதற்குள் நித்திரையாகிவிட்டாயா?' என்று கேட்டுக்கொண்டே நேராகச் சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தான். மேசையில் சோறு, கறியெல்லாம் பக்குவமாகப் படைக்கப்பட்டிருந்தன. ' 'காலங்களில் அவள் வசந்தம்....' என்று இலேசாக இசைத்த வண்ணம் படுக்கை அறையினுள் பிரவேசித்தான். படுக்கை அறையிலும் கோமளாவைக் காணாததால் துணுக்குற்ற சுகுமார், உரத்த குரலில் "கோமளா! கோமளா!!" என்று கூப்பிட்ட வண்ணம் மற்ற அறைகளிலும் தேடிவிட்டு, ஹோலிலுள்ள மேசைக்கு வந்தான். மேசையில் கிடந்த கடிதமொன்று காணப் பட்டது. அதை அவசரமாக எடுத்து வாசித்தான். சப்தம் வெளி வரவில்லை. குரல்வளையை யாரோ நெரிப்பது போன்ற உணர்ச்சி - தரையில் சாய்ந்துவிட்டான். சிறிது நேரம் சென்ற பின் கண் விழித்துக் கடிதத்தின் மிகுதியையும் படித்துப் பார்த்தான்.

'ஓ' வென்று அலறிக்கொண்டு, ஒருவித வெறி பிடித்தவனைப் போலப் பற்களைக் கடித்தான்.

'கோமளா, நீ என்னை ஏமாற்றிவிட்டாயா? இப்பொழுது நீ என்னை வாழச் சொல்கிறாய்' - நான் யாருக்காக வாழ வேண்டு மென்று இருந்தேனோ, அவளுடைய வாழ்க்கை இன்றுடன்

அஸ்தமித்துவிட்டதே. புகையிரதக் கடவையில் பதினைந்து நிமிடம் நான் தாமதிக்கப்பட்டிராவிட்டால் உன் உயிரைக் காப் பாற்றியிருக்கமாட்டேனா கோமளா'' என்று பேசிக் கொண்டே தனது அறையை நோக்கி நடந்தான். மேசை லாச்சியைத் திறந்து ஏதோ ஒரு சிறிய சீசாவை எடுத்துக் கையில் வைத்துப் பார்த்து, ஏளனச் சிரிப்புடன்,

'ஏ பொலிடோலே' முன்பொருமுறை உன்னை ஏமாற்றி விட்டேன் இப்பொழுது உன்னை ஏமாற்றமாட்டேன். ம்.... சரி உன் வேலையைச் செய்!'' என்று கூறியவண்ணம் திராவகத்தை வாயில்விட்டு விழுங்குவதற்கும் மங்கையொருத்தி கையில் குழந்தையுடன் வீட்டினுள் பிரவேசிப்பதற்கும் சரியாக இருந்தது.

**(4)**

கோமளா புகையிரதப் பாதையில் படுத்திருக்கும்போது, ஆசையைத் துறந்து உயிரை மாய்த்துக்கொண்டாளா? அல்லது ஆசைக்கு அடிமைப்பட்டு இன்னமும் வாழ்கிறாளா?

ஆம், அவள் சாகவில்லை. மேலும் சில விநாடிகள் அவள் அசைவற்றுக் கிடந்திருப்பாளானால் நிச்சயம் அவளுடைய சிரசு உடலை விட்டுப் பிரிந்திருக்கும்.

ஆனால்....

அச்சமயம் 'குவா குவா' என்று பக்கத்திலுள்ள புதரிலிருந்து, பிறந்து இரண்டொரு நாட்கள்கூடச் சென்றிராத ஒரு பச்சிளங் குழந்தையின் கதறல் காதைத் துளைத்தது. கோமளா திடுக்குற்று மின்வெட்டு நேரத்தில் துடித்தெழுந்து, புதரை நோக்கி ஓடினாள்.

அங்கே கதறிக்கொண்டிருந்த பச்சிளங் குழந்தையை இரு கரங்களாலும் வாரியணைத்துத் தூக்கிய அதேநேரத்தில் புகைவண்டியும் அவள் நின்றுகொண்டிருந்த இடத்தை தாண் டியது. அதன் வெளிச்சத்தில், குழந்தை ஆண்குழந்தை என்ப தையும், அதன் உடம்பெல்லாம் கட்டெறும்புகள் மொய்த்துக் கொண்டிருப்பதையும் கவனித்தாள். குழந்தையை நிலத்தில் கிடத்தி, எறும்புகளை அகற்றியபின், அதை மார்போடணைத்த வண்ணம் வீட்டை நோக்கி விரைந்தாள்.

**(5)**

குழந்தையும் கையுமாக வீட்டை வந்தடைந்த கோமளா,

தன் கணவர், சீசாவிலிருந்து ஏதோ வாயினுள் ஊற்றியதைக் கண்டாள். உடனே குழந்தையை அருகிலிருந்த கட்டிலில் கிடத்திவிட்டுக் கணவனை நோக்கிப் பாய்ந்தாள்.

"அவசரப்பட்டுவிட்டீர்கள் அத்தான்' விரலைவிட்டு வாந்தி எடுங்கள்" என்று கூறியபடி தனது விரல்களையே கணவனுடைய வாயினுள் செலுத்த முயன்றாள்.

சுகுமார், மனைவியின் கையை ஒருபுறமாகத் தள்ளிய வண்ணம்

"நான் அவசரப்படவில்லை, நீதான் அவசரப்பட்டுவிட்டாய் கோமளா'. நீ தற்கொலை செய்தபின் என்னை வாழச்சொல்லி எழுதிவைத்தாய், அதற்கு என்மனம் இசையவில்லை. விதி செய்த சதியால் இப்படி நடந்துவிட்டது. நீ இறந்துவிட்டாய் என்று நம்பியே நான் இந்த முடிவுக்கு வந்தேன். ஆனால் நீயோ திரும்பியிருக்கிறாய். என்னுடைய கடைசி வேண்டுகோள் ஒன்றை மட்டும் நிறைவேற்றிவிடு கோமளா'. நீ மறுமுறையும் உயிரை விட எத்தனியாதே. உன்னைக் காப்பாற்ற ஒரு குழந்தையைப் பெற்றுவிட்டாய். நீ வாழ்ந்தே தீர வேண்டும்." என்று கூறி முடிக்கும்போது, அவனுடைய கண்கள் ஒளி இழக்கத் தொடங்கி விட்டன.

**(6)**

சின்னத்தம்பி பிரக்கிராசியின் தங்கை மங்களமும் வேறு இருவரும் இப்பொழுது, கோமளா இருக்கும் அறையுள் பிரவேசிக்கிறார்கள். மங்களத்தின் இடுப்பில் ஒரு வயது நிரம்பாத ஆண் குழந்தையொன்று இருக்கிறது. கோமளாவுக்கு அருகில் சென்ற மங்களம், "அக்கா உங்க மகன் தன்னுடைய தங்கச்சியாரைப் பார்க்க வேணுமென்று என்னைப் படாதபாடு படுத்தி விட்டான்" என்று கூறும்போது தான், கோமளா இவ்வுலகுக்கு வந்தவளாக -

'அவர் இன்று இருந்திருந்தால்'.... என்ற பதிலையே கூறுகிறாள்.

நின்று குசுகுசுத்த இரு பெண்களில் ஒருத்தி மற்றவளின் காதில் 'உந்தப் பொடியன் தான் அவளைச் சாகாமல் தடுத்தது' என்று கூறத்தவறவில்லை.

~ **தினகரன்**
**15.06.1962**

# 02 — தவறு

(1)

"இந்தாப்பா, இப்பிடி ஒருக்கா வந்திட்டுப்போ."

புல்வெட்டிக் கொண்டிருந்த சுந்தரம், கத்தியும் கையுமாக "கேட்டு"க்கு வெளியில் நின்று கொண்டிருந்த தியாகராஜனுக்குக் கிட்டச் செல்கிறான்.

"இந்த மடத்திலை "சிவராணி" என்றொரு அம்மா இருக்கிறாதானே?"

"பேரைப் பார்த்தா சைவப்பேர் மாதிரி இருக்கே ஐயா, சைவ அம்மாமார் ஒருத்தரும் இந்த மடத்திலை இல்லையே!"

"இல்லையில்லை, அந்த அம்மா இங்கையிருக்கிறாவென்று நிச்சயமாகத் தெரிஞ்சுதான் வந்திருக்கிறேன்..."

"என்ன ஐயா, அப்பிடி எனக்குத் தெரியாமல் ஒரு சிவராணியம்மா இஞ்சை இருக்கிறதாவது."

"நீயொருக்காப் போய் விசாரித்துக் கொண்டுவாவன்."

"சரி ஐயா நீங்க தேடிற அம்மா எப்பிடியிருப்பாங்க?"

"உன்னுடைய உயரமிருக்கும், மாநிறம், வயது 28, கொஞ்சம் மொத்தமாயிருக்கப்பா, கீழ்ச் சொண்டுக்கும் நாடிக்கு மிடையில் ஒரு கறுப்பு மச்சமிருக்கும்."

"ஓஹோ அந்தம்மாவா?, மடத்திலை சேத்து இரண்டு வருஷமிருக்கும்."

"ஓ, ஓ அவதான்"

"அவவின்ரை பேர் மேரியம்மாவாச்சே' நீங்க என்ன சொல்றீங்க" அவரை ஒருக்காகூட்டி வந்திட்டியெண்டா, எல்லாம் தீர்ந்திடுமே, ஒருக்கா அவவைக் கூட்டிவா" என்கிறான்.

சுந்தரம் மடத்தை நோக்கிச் செல்கிறான்.

சிறிது நேரத்தால் மேரி "கேட்"டை நோக்கி வந்து கொண்டிருக்கிறாள். அவள் "கேட்"டை அணுகிக்கொண்டிருக் கும் போது, தன்னைக் காண வந்த ஆள் யாரென்று குறிப்புத் தெரிந்தவுடன், அதிர்ச்சியுற்று ஒரு கணம் அசைவற்று நின்று விட்டு வந்த வழியே திரும்புகிறாள்.

"ராணி, உனக்கு ஒருவித சிரமமும் கொடுக்கமாட்டேன், நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டுபோ, ராணி' ராணி'" என்று சிறிது உரக்கவே கூறிவிட்டான் தியாகராஜன்.

சிறிது தூரம் சென்ற மேரி திரும்பவும் அசைவற்று நிற்கிறாள். திடீரென ஒரு முடிவுக்கு வந்தவளாகத் திரும்பவும் "கேட்"டை நோக்கி நடக்கிறாள்.

இரும்புக் "கேட்"டுக்கு ஒரு புறத்தில் மேரி, மறுபுறத்தில் தியாகராஜன். இருவருக்குமிடையிலுள்ள தூரம் இரண்டு அடி களுமில்லை. ஆனால், இருவரின் இலட்சியங்களோ, ஒன்றிலி ருந்து மற்றது எத்தனையோ மைல்களுக்கப்பால் நின்றன'

"ராணி என்னை மன்னித்துவிடு'" தியாகராஜன் கெஞ்சி னான்.

"மன்னிக்கவேண்டும் எனது பெயர் இப்போது மேரி!"

தியாகராஜனின் இதயம் சுக்குநூறாகப் பிளக்கிறது'

"ராணி நீ மதம் மாறிவிட்டாயா?"

"மதம் மட்டும் மாறவில்லை, மறுபிறப்புமெடுத்திருக் கிறேன்!"

"ராணி என்னைக் கொல்லாதே, என்னை மன்னித்து என்னுடன் வந்துவிடு. நான் இறக்கும் வரைக்கும் இனிமேல் உன்னைப்பிரிய மாட்டேன். இது சத்தியம்!"

"எனக்கு நிறைய அலுவல் இருக்கு, என்னை ஏன் அழைத்தீர்கள்?"

"ராணி, என் இதயராணி, என்னை மன்னித்துவிடு ராணி!"

"நான் மன்னிப்பதற்கு, நீங்கள் ஒரு குற்றமும் செய்ய வில்லையே!" என்று கூறிய வண்ணம் தனது இடத்தை நோக்கி நடக்கலாயினாள் மேரி.

சூத்திரப்பாவை போல் தன்னையே மறந்த நிலையில் வீதியில் நடந்து கொண்டிருந்தான் தியாகராஜன்.

## (2)

அன்று தியாகராஜன் ஆபீசால் வீடு திரும்பிய போது வழமைபோல் மனைவியை வாசலில் காணவில்லை. தேடிக் கொண்டு சென்றபோது, அவள் குசினி சன்னலக்கூடாக வானத்தை வெறிச்சுப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

பின்புறமாகச் சென்ற தியாகராஜன் மனைவியின் தோளில் தனது வலது கரத்தைப் போட்டபடி -

"ராணி என்ன யோசனை பலமாயிருக்கு..." என்றான்.

கணவனின் கையைத் தட்டிவிட்டபடி, "விடுங்கோ என்னைத் தொடவேண்டாம்" என்று சீறினாள்.

கண்களிலிருந்து ஊற்றெடுத்த நீர் கண்ணாடிக் கன்னத்தால் வழிந்து மார்பகச் சேலையை நனைத்துக் கொண்டிருந்தது' இதழ்கள் வார்த்தைகளை விளக்கத் துடித்துக் கொண்டிருந்தன!

தியாகராஜன், மனைவியின் முகத்தை நிதானமாகப் பார்த்தவாறு,

"ராணி, இதன் அர்த்தம் என்ன?" என்றான்.

அடக்கமுடியாத அழுகையின் மத்தியில் சிவராணி கூறுகிறாள்.

"ஊர் பேசுவது உண்மையா?"

"என்னத்தைப் பேசிது?"

"உங்களையும் கமலாவையும் பற்றி"

"எப்பிடிப் பேசிது?"

"கமலா உங்களுக்கு கர்ப்பம்...."

"தரித்திருக்கிறாள் தான் அதற்கென்ன? உன்னோடு ஏழு வருடம் வாழ்ந்து என்ன சுகத்தை நான் கண்டுவிட்டேன்' காலமெல்லாம் உன்னை நம்பி ஒரு அடிச்சுவடு இல்லாமல் அழிந்து போகச் சொல்லிறியா?" என்று பொங்கினான் தியாகராஜன்.

கணவனின் வார்த்தைப் பாணங்களின் வெம்மை தாங்க மாட்டாதவளாய் , சிவராணி அந்தக்கணமே வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள்.

**(3)**

கமலா, தியாகராஜன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருந்த வயித்தியலிங்கத்தின் ஏகபுதல்வி. தியாகராஜன் ஒரு கணிதப் புலி' சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த கமலாவுக்கு கணிதப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தனது கணவனை சிவராணி ஒழுங்குசெய்யும் போது, கமலா தன்னுடைய வாழ்க்கையை அபகரிப்பாளென்று கனவிலும் அவள் கருதவில்லை.

கமலாவுக்குக் கணிதப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கிய தியாகராஜன் காலக் கிரமத்தில் காதற் பாடமே அவளுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டான்.

சிவராணி வீட்டைவிட்டு வெளியேறிய இரண்டாவது மாதம் கமலா சிவராணியின் ஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொண்டாள். தியாகராஜன் - கமலா தம்பதிகளின் வாழ்க்கை இன்பகரமாக ஓடிக்கொண்டிருந்தது. கமலா தியாகராஜன் வீட்டுக்கு வந்த ஆறாம் மாதம் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத் தாள்.

தியாகராஜன் இப்பொழுது வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். கமலாவின் மருட்டும் விழிகளும் மயங்கும் மொழியும் தியாகராஜனுக்கு, அவனைச் சட்டப்படி கைப்பிடித்த மனைவியின் எண்ணத்தையே மறக்கச்செய்துவிட்டன.

(4)

சிவராணியின் வாழ்க்கையில் சகல சௌகரியங்களி ருந்த போதிலும், குழந்தையில்லாத ஒரு குறையால், மற்ற எந்தச் சௌகரியங்களுமிருப்பதாக அவளுக்கு தோன்றவில்லை.

குழந்தைகளின் மீது அலாதி பிரியமுள்ள தனது கணவ னுடைய ஆசைக்கு ஒரு மகவைப் பெற்றளிக்க அவள் துடி யாய்த் துடித்தாள்.

எதிர்வீட்டில் பிள்ளைத்தொட்டில் ஆடுவது கண்ணில் பட்டால் அவளது இதயம் ஆட்டமெடுக்கும்! பக்கத்து வீட்டில் பச்சிளங் குழந்தையின் அழுகைக்குரல் கேட்டால் அவளுடைய நெஞ்சு நினைவையிழக்கும்! பசு, கன்றுக்குப் பால் கொடுக்கும் காட்சியைக் கண்டால் அவளுடைய உள்ளம் பாகாய் உருகும்.

"எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தபின், வேண்டு மானால் என் உயிரையே எடுத்துக்கொள்!" என்று அவள் வேண்டாத தெய்வமில்லை. இந்த நிலையில் கணவனே கதி யென்றிருந்த அவள் கணவனின் கொடூரமான வார்த்தைகளைக் கேட்டு புழுவாய்த் துடித்தாள்.

வீட்டை விட்டு வெளியேறிய சிவராணி, பெரும்பாலான பெண்களைப் போல் கணவனாற் புறக்கணிக்கப்பட்டதுடன் வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்ய அவள் முற்பட வில்லை. தான் பிறவியெடுத்தது, வாழ்ந்து, மணமுடித்து மக்களைப் பெறுவதற்கு மட்டுமல்ல, அதிலும் உன்னத சேவைக்குத் தன்னைப் பயன்படுத்தலாம் என்ற பரந்த நோக்கத் தைப் பெற்றிருந்தபடியால், அவள் ஒரு கிறிஸ்தவ கன்னியாஸ் திரி மடத்தில் சேர்ந்து, அனாதைப் பிள்ளைகளுக்குச் சேவை செய்யும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டாள்.

**(5)**

தியாகராஜனும், கமலாவும் தம்பதிகளாகி இரண்டு வருடங்கள் உருண்டுவிட்டன. இதுகாலும் அவர்களுடைய வாழ்க்கை ஒரே "குஷி"யாகவேயிருந்தது. அவர்களுடைய ஆனந்த வாழ்க்கைக்கு மெருகூட்ட அவர்களின் செல்வக் குமாரன் மோகன் வேறிருந்தான்.

ஒருமுறை தியாகராஜனுக்கெட்டிய வதந்தியொன்றை ஆரம்பத்தில் அவன் நம்பவேயில்லை. நாட்கள் செல்லச் செல்ல அவ்வதந்தி அவனது உள்ளத்தில் விசுவரூபமெடுத்தது.

ஒருநாள் கமலாவை அது பற்றி நசுக்காக அவன் கேட்டபோது, கமலா தேள் கொட்டியவள் போலத் துடித்தெழுந் தாள்.

"என்ன அத்தான், என்மேல் சந்தேகமா உங்களுக்கு? நாங்கள் சந்தோசமாக வாழப் பொறுக்காத கயவரின் கட்டுக் கதையை நம்பிவிட்டீர்களா?" - விசித்து விசித்து அழத்தொடங்கி விட்டாள் கமலா.

அவளின் அழுகையைத் தேற்றுவதே பெரும் சிரமமாய்ப் போய்விட்டது தியாகராஜனுக்கு. அன்றிலிருந்து அக்கதையை எடுக்கவே அவனுக்குப் பயமாயிருந்தது. ஆனால் அவனுடைய நெஞ்சில் முளையிட்ட சந்தேகம் மட்டும் கருகிவிடவில்லை.

ஒருநாள் தியாகராஜன் கமலாவுக்குத் தெரியாமல் காரியாலயத்தில் அரைலீவு எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வருகிறான்.

வீட்டுக் கதவு உட்புறத் தாழ்ப்பாள் போடப்பட்டிருக்கிறது.

"டொக்.... டொக்.... டொக்"

"............"

"டொக்.... டொக்.... டொக்.... டொக்...."

"............"

"கமலா, கமலா"

"இதோ வந்திட்டேன்"

குசினிப் புறத்திலிருந்து வந்தது கமலாவின் குரல்.

கதவு திறக்கப்படுகிறது.

"அத்தான், - நான் - முன்பு - உங்களுக்குச் சொன்னேனே - ச - த் - தி - ய - சீ - ல - ன் என்னோடு கூடப்படித்தவர் - "

"ஙஅ, அதற்கென்ன இப்ப.."

"அவர் ஏதோ அலுவலாக டவுனுக்கு வந்தவராம். நான் இங்கையிருக்கிறதென்று கேள்விப்பட்டாற்போல் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்திருக்கிறார்'" என்றாள் குழைவாக.

கண்கள் கனலைக்கக்க, மனைவியையும் மோகனையும் இடறிக்கொண்டு பின் விறாந்தைக்குச் சென்றான் தியாகராஜன்.

சத்தியசீலன், மோகனை மார்போடு அணைத்துக் கொண்டு நிற்பதைக் கண்ட தியாகராஜன், சிலையாக நிலைத்து சத்தியசீலனின் முகத்தையும் மோகனின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கிறான்.

பெரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிக்கு அவன் தேடிய உண்மை திடீரெனப் புலப்படும்போது அவனுடைய முகத்தில் ஏற்படக்கூடிய ஒளி தியாகராஜனின் முகத்திலும் தென்பட்டது.

ஒரு வார்த்தையும் பேசாது வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறான் தியாகராஜன்.

**(6)**

தியாகராஜன் மேரியுடன் கதைத்துவிட்டுத் திரும்பிய சிறிது நேரத்தால் கடையில் பீடி வாங்கச் சென்ற சுந்தரமும் பீடி வாங்காது இளைக்க இளைக்க ஓடி வந்து -

"மேரியம்மா' மேரியம்மா' உங்களைக் கண்டு கொண்டு போன ஆளை கார் அடிச்சுப் போட்டுது' இரத்த வெள்ளத்திலே கிடக்கிறார்" என்றதும், "ஓ"வென்று அலறிக்கொண்டு நொடிப் பொழுதில் தியாகராஜன் இரத்தவெள்ளத்தில் கிடக்கும் இடத் துக்குப் பறந்து வந்து சிவராணி, தியாகராஜனின் தலையைத் தூக்கி தனது மடியில் வைத்து....

"அத்தான்' விழித்துப் பாருங்கள் அத்தான்' நான் வந்தி ருக்கிறேன்'" கூட்டத்திலிருந்து ஒருவர் தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்ததும், முனகிக்கொண்டு அரைவிழிகளால் சிவராணியின் முகத்தை நோக்கிய தியாகராஜனின் முகத்தில் ஒரு ஒளிபிறந்து மறைகிறது.

– சுதந்திரன்
23.12.1962

## 03 — மான நட்டம்

"என்ன காணும் மூர்த்தி உமக்கு வேறொருத்தருடைய சரித்திரமும் கிடைக்கவில்லை, என்ரை சரித்திரம்தான் கிடைத்ததா கதை எழுதிப் பழக: நூற்றுக்குநூறு என்ரை வாழ்க்கையையே எழுதி வெளியிட்டு விட்டீரே காணும் ! இப்ப நான் மான நட்ட வழக்குப் போட்டால் உம்முடைய கெதி என்ன வாகும்."

மாத சஞ்சிகை "சாம்பாரை" என்முன் வீசி எறிந்துவிட்டுக் கனல்கக்கும் கண்களுடன் என்னிடமிருந்து பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான் ஐயாத்துரை.

எதிர்பாராத தாக்குதலால் பிரமித்துப்போய் சிலையாய் அமர்ந்திருந்தேன் நான்.

"என்னகாணும் பேசாமலிருக்கிறீர்?" என்ற ஐயாத்துரை யனின் மற்றக் கேள்வி மதுவாடை கலந்து என்னைத் தாக்கியது.

ஐயாத்துரையன் இப்போது தனிய வரவில்லை. இன் னொருத்தரின் (மதுவின்) உதவியுடன் வந்திருக்கிறான் என்பதை மனதில் கணித்து "துரை இப்பிடி இரும், உம்மை யாரோ தப்பான வழியில் தூண்டிவிட்டிருக்கிறார்கள் போலிருக்கு. உம் முடைய வாழ்க்கைக்கும் எனது கதைக்கும் ஒருவித சம்பந்தமும்

கிடையாது. கதையின் முடிவில் "யாவும் கற்பனை" என்ற பதம் என்னைப் பொறுத்தவரையில் நூற்றுக்குநூறு உண்மை இதை நம்பும்" என்றேன் அமைதியாக.

"ஓமோம் கற்பனை என்ற கவசம் போட்டு அப்பாவி மக்களைக் கண்டபடி தாக்குவது தானாக்கும் உம்மைப் போன்ற வரின் தொழில்" என்று படபடத்தான் ஐயாத்துரை.

"அது தவறு துரை, எங்கே என்னுடைய கதையை இன்னுமொருக்கா வாசியும்" என்றேன்.

"ஒருக்கா என்ன ஒன்பது தடவை வாசித்தாலும் அது என்னுடைய வாழ்க்கையாகவேயிருக்கு"

"சரி எனக்காக இன்னுமொரு தடவை வாசியும், இது உம்முடைய வாழ்க்கை அல்லவென்று நான் நிரூபிக்காவிட்டால், நீர் கேட்கும் மானநட்டம் தர நான் தயாராயிருக்கிறேன்" என்றதும், மதுவுக்கு அடிமையாயிருந்த ஐயாத்துரையன் மறு வார்த்தை பேசாமல் "சாம்பாரில்" வெளிவந்த எனது கதையை வாசிக்கத் தொடங்குகிறான்:-

"நேரம் நடுநிசி பன்னிரண்டு மணிக்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. மதுவெறியால் தனது நிதானத்தில் 99 சதவீதத்தையும் இழந்த துரையன், தேசிய வீடமைப்புப் பகுதி யினரால் அமைக்கப்பட்டு, சொந்த வீடில்லாத மக்களுக்குச் சீட்டிழுப்பு மூலம் கூலிக்குக் கொடுக்கப்பட்ட அந்த மூன்று மாடிக் கட்டடத்தின் படிகளில் நான்கு கால்களால் ஏறிக்கொண்டிருக் கிறான்.

நிதானமிழந்த நிலையிலும் துரையன் தன்னுடைய புகலிடத்தை அடையமுடிந்தது. அவனுடைய வீட்டிற்கு அப்பாலும் மாடிப்படிகள் எதுவும் இல்லாத காரணத்தால்தான்.

தலைவரின் வருகையை எதிர்நோக்கித் தாளிடப்படா மலிருந்த கதவின் குமிழியில் துரையன் கையைப்போட்டதும் கதவு தானாகவே திறக்கப்பட்டது.

விறாந்தையில் பிரவேசித்த துரையன் "செல்லம், செல்லம்" என்று குரல் கொடுக்கிறான்.

பதிலில்லை.

சில வினாடிகளில் செல்லத்தின் எட்டுமாதக் குழந்தை "வீர்" என்று கதறுகிறது!

"உங்களுக்கென்ன கோதாரியே குழந்தையை உழக்கிக் கொல்லுறியள்". செல்லம் சீறினாள்!

"நான் இவ்வளவும் கத்தினது உனக்குக் கேக்கேல்லை. குழந்தை கத்தினது எப்பிடிக் கேட்டுதடீ?" துரையனின் கேள்வி!

"கலியாணத்தைக் கட்டிப்பிள்ளை குட்டிகளைப் பெத் திட்டுச் சோறு போட வல்லமையில்லாமல் கழுத்திலை உழக்கிக் கொல்லப்பாக்கிறியளா? வயித்துக்குத்தான் போட முடியாது, மனிதரை நிம்மதியாய்த் தூங்கத் தன்னும் விடுகிறியளா?"

"என்னடி எட்டு மணிக்கிடையிலை தூக்கம்? நீதான் தூங்கினால் பரவாயில்லை, விளக்கையும் அணைத்துப்போட்டுத் தூங்கினால், குழந்தையின் கழுத்தை விலத்தி என்னால் எப்படிக் கால் வைக்க முடியும்?" துரையனின் வாதம்.

"இனிமேல் ஒரு முழக்கயித்திலை தூங்குகிறதுதான் பாக்கி, அதையும் செய்திட்டேனெண்டால் உங்களுக்கு நிம்மதி யாயிருக்கும்".

"அதையும் ஏண்டி இன்னும் செய்யாமலிருக்கிறாய்? ஆனா, அதுக்கு முன் இன்னொன்றையும் செய்துவிட்டுத்துலை, உன்ரை மூண்டு பிள்ளைகளையும் எங்கையாவது ஆத்திலை குளத்திலை போட்டிட்டு, நீ செய்யப்போவதுக்கு வேறொருவரும் பொறுப்பில்லையெண்டு ஒரு துண்டும் எழுதிவைச்சிட்டு, நிம்மதியாய் ஒரு முழக்கயித்திலை தூக்கிலிட்டியெண்டா பெரிய உதவியாயிருக்கும்" என்று துரையன் யோசனை கூறியதும், செல்லம் தன்னையே மறந்துவிட்டாள். -

"எட பாவி, இப்பிடியுமொரு தகப்பன் இருப்பானா? பெண்டில் பிள்ளைகளைப் பட்டினி போட்டிட்டு, ஒவ்வொரு நாளும் மூண்டு, நாலு ரூபாவுக்கு குடிச்சுப் போட்டுச் சாமத்திலை வந்து அக்கிரமம் செய்யிறியே, இப்படி வெட்கம் கெட்ட சீவியம் நடத்தாமல், இந்த மாடியிலையிருந்து பாய்ந்து துலைஞ்சு போனியெண்டால், என்ரை பிள்ளையளை வளக்க எனக்கு வழி தெரியும்".

"நான் துலைஞ்சிட்டால் உனக்கு எவனடி உழைச்சுத் தருவான்?"

"எனக்கு ஒருத்தன்ரை உழைப்பும் தேவையில்லை. என்ரை கையும் காலும் போதும்"

"உனக்குக் கையும் காலும் தேவையில்லை. உன்ரை கண்கள் போதாதாடீ?"

"மரியாதை தப்பினால் நானும் மரியாதை பார்க்க மாட்டன்"

"போடீ, உன்ரை மரியாதையைக் கொண்டுபோய் குப்பையிலை போடு. இந்த வீட்டுக்கு ஏக அதிகாரியடி நான். அளவுக்கு மிஞ்சினால் கழுத்திலே பிடிச்சுத்தள்ளிவிடுவன் வெளியாலை ஒரு பிள்ளைக்குப் பயப்படுவேனாடி? எவனாவது வந்தால் அவன்ரை ஈரலைத் திண்டிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பன் ஆமா" என்று சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாத முறையில் அலட்டுகிறான் துரையன்.

துரையன் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தை. நிரந்தர உழைப்புக் கிடையாது. ஏதாவது கையில் கிடைத்தவுடன் "மூக்குமுட்டக்" குடித்துவிட்டு வந்து மனைவியுடன் போர் தொடுப்பது தான் அவனது தொழில், குடிப்பதற்குப் பணம் கிடைக்காத நாட்களில் யாராவது குடிகாரரோடு வலிய உறவு கொண்டாடி, எப்படியாவது குடித்துவிட்டுத்தான் வீடு திரும்புவான்.

செல்லம் அக்கம் பக்கத்து வீட்டாருக்கு ஏதாவது ஒத்தாசை புரிந்து கிடைக்கும் அற்ப பணத்தில் பிள்ளைகளுக்கு ஒரு நேரமில்லாவிட்டால் மறுநேரம் ஏதாவது ஆக்கிக் கொடுப்பாள்' கணவனின் அக்கிரமம் அத்தனையும் சகித்து வந்த செல்லம், தன்னுடைய பெண்மைக்கே மாசு ஏற்படும் வகையில் துரையன் பேசியதை மட்டும் அவளால் சகித்துக் கொள்ளமுடியவில்லை.

தனது அசட்டுத்தனமான வார்த்தைகளால் மனைவி பொங்கிக்கொண்டிருக்கிறாளென்பதை உணராத துரையன் திரும்பவும், "உனக்கென்னடி குறை? நான் துலைஞ்சுபோனா

உனக்கு எத்தனைபேர் உதவிசெய்வாங்க...." என்ற வாக்கியத்தை முடிக்க முன் செல்லம் புலிபோலப் பாய்ந்து கணவனின் தலைமயிரைப் பற்றி முன்னும் பின்னுமாகப் பல தடவை ஆட்டிய பின் மரம்போல் நிலத்தில் சாய்ந்து "ஓ" வென்று கதறுகிறார்.

"என்னுடைய பெண்சாதியால் அவமதிக்கப்பட்ட நான் இருந்தென்ன இறந்தென்ன, நீ முந்தி மாடியிலையிருந்து பாய்ந்து தொலையச் சொன்னியே அதை இப்பவே செய்து காட்டிறன்" என்று கூறிக்கொண்டு அறையை விட்டு வெளியேறுகிறான் துரையன்.

சில வினாடிகளில், நிலத்தில் "தடார்" என்ற ஒரு சத்தத்தோடு "ஆ" வென்ற அலறலும் கேட்கிறது.

செல்லம் ஓடோடிச் சென்று மாடியிலிருந்து நிலத்தை எட்டிப்பார்த்துவிட்டு "ஓ"வென்று அலறிக்கொண்டு ஒரு நொடியில் மூன்று மாடிப்படிகளையும் தாண்டி, நிலத்தை வந்து அடைந்து விட்டாள்.

நிலத்தில் போதிய வெளிச்சம் இல்லாதிருந்தாலும், முகம் குப்புற விழுந்துகிடப்பது மனித உருவமென்று அறியக்கூடிய தாக விருந்தது. பிரக்ஞை அற்ற நிலையிலிருந்த உடலை அணைத்து, "என்ரை ராசா, நீ இப்படிச் செய்வாயென்று நான் நினைச்சேனா? ஐயோ, எங்களைத் தவிக்கவிட்டு போய் விடாதையுங்கோ, கடவுளே எனக்குத்தாலிப் பிச்சைதா' என்ரை ராசா, என்னை மன்னிச்சுவிடுங்க. நான் இனிமேல் எதிர்த்தொரு வார்த்தை பேசமாட்டன்" என்று செல்லம் ஒப்பாரி வைத்துத் தலையில் அடித்துக்கொண்டிருக்கும்போது, துரையன் ஓடோடி வந்து, "செல்லம், இது யார் விழுந்து கிடக்கிறது" என்று கேட்ட வாறு விழுந்துகிடக்கும் மனிதனின் முகத்தைத்திருப்பி உற்று நோக்கிவிட்டு "ஐயோ அப்பா, உனக்கா இந்தக் கதி வரவேண்டும்" என்று குலுங்கிக் குலுங்கி கதறுகிறான்.

செல்லத்தின் கதறலின் உத்வேகத்தை ஆச்சர்யம் தணித்துவிட்டது. செய்வதறியாமல் சிணுங்கிக் கொண்டிருக்கிறாள்.

மனைவியால் அவமதிக்கப்பட்டவுடன் தன்னுடைய உயிரைப் போக்க வேண்டுமென்ற உணர்வு மதுவால் மரத்துப் போன துரையனின் தோலுக்கு எங்கே இருக்கப் போகிறது' மனைவியை ஏமாற்றுவதற்காக, விறாந்தையிலிருந்த கல்லுர லொன்றைத் தூக்கி மாடியிலிருந்து கீழே எறிந்துவிட்டுச் சந்தடி செய்யாமல் துரையன் மாடிப்படிகளால் இறங்கி, மறைந்து கொண்டான்.

நிலத்து வீடொன்றில் குடியிருக்கும் துரையனின் தந்தை, தனது மைந்தனின் உள்நாட்டுக் கலகத்தைச் சமாதானம் செய்து வைக்கப்புறப்பட்டதைத் துரையன் அறிந்தானில்லை. தன்னைத் தவமிருந்து பெற்ற தந்தைக்குத் தானெறிந்த கல்லுரல் இயமனாகி விட்டதேயென்று விசித்துவிசித்து அழுதான் துரையன். அவனுடைய மதுவெறி இருந்த இடம்தெரியாமல் மறைந்துவிட்டது.

நேரம் நடுநிசியென்றாலும், தொடுத்த மாடி வீடொன்றில் அசம்பாவிதமொன்று நிகழ்ந்துவிட்டால் கூட்டத்திற்குக் கேட்கவா வேண்டும்' கூட்டத்தில் நின்ற சமயோசித புத்தியுள்ள ஒருவர், வாடகைக் காரொன்றைக் கொண்டுவந்து, துரையனின் தந்தையை அருகாமையிலிருந்த வைத்திய மனையொன்றிற்கு எடுத்துச்சென்றுவிடார்.

நேரம் அதிகாலை மூன்று மணி. இரவின் பயங்கர அமை தியைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டது வைத்தியசாலையிலி ருந்து திரும்பி, மாடிப்படிகளில் கால் வைத்த துரையனின் குரல்'

"செல்லம் நான் திருந்திவிட்டேன். என்னைத் திருத்தத் தன் உயிரையே அர்ப்பணித்த என் அருமை அப்பாவின் மேல் ஆணை, நான் இனிமேல் மதுவை மனத்தாலும் தீண்டமாட்டேன்" என்ற துரையப்பனின் கர்ச்சனை மாடிக் கட்டடங்களில் மோதி எதிரொலித்தது.

* * *

கதையின் முடிவிலிருந்த 'யாவும் கற்பனை" என்ற வாக்கியத்தையே கவனியாது 'சரி வாசித்துவிட்டேன் இந்தக் கதையிலே நீர் செய்த மாற்றம் என்னுடைய பெண்சாதி செல்லம்மா' வினுடைய வாலை வெட்டி செல்லம் " என்றும் போட்டிருக்கிறீர். இதைத் தவிர்ந்த அத்தனையும் என்னுடைய

வாழ்க்கையே" என்று கூறியபடி, திரும்பவும் 'சாம்பாரை" என்முன் வீசிய ஐயாத்துரையனை இடைமறித்த நான் 'ஆனால் இன்னுமொரு முக்கியமாற்றம் துரை. என்னுடைய கதையிலே வரும் கதாநாயகன், இப்பொழுது மதுவை மனத்தாலும் நினைப்பதில்லை. ஆனால் நீரோ இப்பவும் மதுபோதையில் இருக்கிறீர் அது ஒன்று மட்டும் போதாதா என்னுடைய கதை உம்முடைய வாழ்க்கை அல்லவென்று நிரூபிக்க' என்றேன்.

'சரி, சரி. உம்மை என்னுடைய மான நட்ட வழக்கில் குற்றவாளியாக நிரூபிக்கிறதுக்காவது இந்தக் குடியை இன்றுடன் விட்டிட்டு உம் மேல் மான நட்ட வழக்குத் தொடரப்போகிறேன் என்று படபடத்துக்கொண்டு வெளியேறிய ஐயாத்துரையனின் காதுகளில் நான் கூறிய ' என்னுடைய இந்தக் கதையை உம் முடைய வாழ்க்கையைத் திருத்தக்கூடிய ஒரு மகத்தான சேவை யைச் செய்ய முடியுமென்றால் நீர் தொடரப் போதுமான நட்ட வழக்கிற்கு நான் குற்றத்தையும் ஒப்புக்கொள்ளவும் சித்த மாயிருக்கிறேன்" என் முழுவாக்கியமும் விழுந்திருக்கு மென்றே நம்புகிறேன்.

**பின் குறிப்பு:**

ஐயாத்துரையன் குடிசையைவிட்டு விட்டு என் மேல் மான நட்ட வழக்குத் தாக்குதல் செய்தானாவென்று அறிய ஆவலுள்ள வர்கள் சில மாதங்கள் கழித்து என்னுடன் தொடர்பு கொள்ளவும்

- மூர்த்தி.

~ சுதந்திரன்
23.12.1952

## 04 மனச் சாட்சி

**(1)**

"தாழையடிக் கிழவா' இவ்வளவையும் இண்டைக்கு விலைப்படுத்திவிட்டியெண்டால், பேந்து இதாலை போகை யிக்கை உன்ரை உண்டியலிலை நாலு பணம் போடுவன்."

ஏறத்தாழ அரை அந்தர் பாரமுள்ள பச்சைப் பசேலென்ற கீரைக் கட்டைத் தலையில் சுமந்தவண்ணம், கந்தரோடை சுன்னாகம் வீதியில் சுன்னாகச் சந்தையை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றுகொண்டிருந்த தங்கம் ஐயனார் கோவிலுக் காகத் தெருவோரமாக வைக்கப்பட்டிருந்த உண்டியலையும் விளக்குக் கம்பத்தையும் தாண்டும்போது, அவளையும் அறியாமல் அவளது வாய் முணுமுணுத்தது.

நாற்புறமும் நெல் வயல்களும் காய்கறித்தோட்டங்களும், சூழ்ந்திருக்க, நடுவில் எழுந்தருளியிருக்கும் ஐயனாரிடம் அவ்வளவு மதிப்பு அப்பக்கத்திலுள்ள விவசாயிகள் அத்தனை பேருக்கும், திருத்தலத்தின் ஒரு கோடியில் தாழை மரங்கள் காணப்படுவதால் பக்தர்கள் ஐயனாரை அழைக்கும் மறுபெயர் தான் "தாழையடிக்கிழவன்" தங்கத்தின் வியாபாரம் சில முறைகளில் அமோகமான இலாபத்தையும், பல முறைகளில் பெரும் நட்டத்தையும் அளித்திருந்தாலும், இலாபம் பெறும் முறைகளில் மட்டும் அது "ஐயனாரின் அருள்" என்று திருப் திப்பட்டுக்கொள்வாள்.

தங்கம் ஓர் 'அநாதை' என்று சொல்லுவதற்குத் தடையாக அவளுக்குப் பதினைந்து வயதுள்ள ஒரு மகனும் பத்து வயதுள்ள ஒரு மகளும் இருந்தனர். தானில்லாவிட்டால் மனைவியாலும் பிள்ளைகளாலும் சீவிக்கமுடியுமோவென்று பரீட்சித்துப் பார்க்கவோ என்னவோ சுமார் எட்டு வருடங்களுக்கு முன் தனது இரண்டு பிள்ளைகளிடமிருந்து நிரந்தரமாகப் பிரியாவிடை பெற்றுவிட்டார் சுப்பையா. அதன் பயனாக, பிள்ளைகளிரண்டும் ' தேப்பனைத் தின்னியள்' என்றும் தங்கம் 'தாலியறுத்தவள்' என்றும் கிராமமக்களால் பட்டம் சூட்டப்பட்டனர். இன்று வரைக்கும் பிள்ளைகளிரண்டையும், ஒரு நேரமில்லாவிட்டால் ஒரு நேரம் உணவு கொடுத்து வளர்த்து அவர்களுக்குத் தாய் பாஷையில் ஆறாம் வகுப்பு மட்டும் கல்வி ஊட்டியதற்கு அவளு டைய கணவன் அவளுக்கு அளித்த கிருஷிகப் பயிற்சியின் மகத் துவமே காரணம் என்றால் தவறாகாது.

**(2)**

"கீரை, கீரை, முளைக்கீரை, நாலு பணத்துக்கு இரண்டு பிடி' - சுன்னாகச் சந்தையின் மரக்கறிக் கடை இரைச்சலை விலக்கிக்கொண்டு முன்னுக்கு நின்றது தங்கத்தின் குரல்.

மீன்கடை அலுவலை முடித்துக்கொண்டு காய்கறி கடைப்பக்கம் வந்த கச்சேரி இலிகிதர் கனகசபையின் கவனத் தைக் கட்டழகி தங்கத்தின் 'கணீர் என்ற குரல் ஈர்த்தது.

'கீரைப்பிடி என்ன விலை'?

"ஒரு பிடி 15 சதம், இரண்டு பிடி நாலு பணம் ஐயா"

"ச்ச, ச்ச கறிதான் நெருப்பு விலையெண்டால், நீ கீரைக்கும் நெருப்பு விலை சொல்லிறியே"

"என்னையா செய்யிறது. உலகத்திலை அந்தளவிலை பஞ்சம் தாண்டவமாடுது'"

"சரி சரி இரண்டு பிடிதா, இருவது சதமெடு"

"நாங்க ஒருத்தருக்கு ஒரு விலை சொல்லிறேல்லை ஐயா, இந்த விலைக்கு எத்தனை முட்டுப்பட்டவங்க வாங்கிக்கொண்டு போறாங்க, நீங்க உத்தியோககாரரே இப்பிடி வரையறை பாத்தா நாங்க ஏழையள் எப்பிடி ஐயா சீவிக்கிறது?"

படித்த வாலிபனுக்கும் பாமரப் பெண்ணுக்குமிடையில் நிகழ்ந்த உரையாடல்.

ஒரு பெருமூச்சுடன், ஒரு ரூபாத் தாளொன்றை நீட்டிய கனகசபை 'ங்அ, இந்தா இரண்டு கட்டுத்தா" 'தா' என்ற பதத்திற்கு அர்த்தமில்லாமல், தானே இரண்டு கொழுத்த கட்டுக் களைத் தெரிந்து எடுத்துக்கொண்டு மிகுதிப் பணத்துக்காக கையை நீட்டினான்.

'கல்வியறிவு இல்லாவிட்டாலும், அனுபவத்தால் கணக்கு வழக்கில் சூரப்புலி' என்று கூறுவது போலிருந்தது, அவள் ஒரு நொடிக்குள் முந்தானையில் போட்டுவைத்திருந்த காசிலிருந்து மிகுதிப் பணத்தையெடுத்துக் கனகசபையின் கையில் வைத்த விதம்.

கனகசபை மிகுதிப் பணத்தைச் சரி பார்த்துக் கொண் டதும், சிறிது நேரம் அசைவற்று நின்கின்றான். உள்ளத்தில் இரண்டு சக்திகளுக்கிடையில் பலத்த போராட்டம் நடைபெறு கிறது. திடீரென ஒரு முடிவுக்கு வந்தவனாகத் தனது துவிச்சக்கர வண்டியில் ஏறுகிறான். அவனுடைய சிந்தனை வேகம் துவிச் சக்கர வண்டியின் சக்கரங்களில் பிரதிபலித்தது.

(3)

முன்பு ஒரு நாள் கனகசபைக்கு பிரபல பலசரக்குக் கடையொன்றிற்குப் போனபோது -

"முதலாளி, இந்தத் துண்டிலிருக்கிற சாமான்களைப் போடுங்கோ, விலையை ஒரு மாதிரிப் போட்டுக்கொள்ள வேணும்"

" உங்களிடமெல்லாம் கூட வாங்குவமா சார்"

" இல்லை, சில கடை முதலாளிகள் அறிந்த ஆட்கள் விலை கேட்டு வாங்கமாட்டினம் என்ற எண்ணத்தில் வழக்கமாக விற்கிற விலையிலும் ஐந்து, பத்துச் சதம் கூடச் சொல்லு வினமாம். அதுதான் வியாபாரத் தந்திரம்.

'ச்ச,ச்ச, அந்த வரிசையிலை எங்களை மட்டும் சேர்த்துக் கொள்ளாதையுங்கோ சார்."

" சரி சரி மாஸ் இருக்கா, றாத்தல் என்ன விலை? "

"திறம் மாஸ் நாலு ரூபா விற்கிறம். உங்களுக்கு மூண முக்கால் போடலாம்."

'ஐயையோ, அதுக்கு இப்ப காசு பத்தாது. துண்டிலை யிருக்கிற சாமானுக்கு எவ்வளவு வருகுது" என்று கூறியபடி கனகசபை ஐந்து ரூபா நோட்டொன்றை எடுத்து நீட்டுகிறான்.

" நாலு ரூபா முப்பது சதம்" என்று கூறிய முதலாளி சங்கரப்பிள்ளை, வேறு எதில் புலனை விட்டாரோ தெரியாது, கனகசபையின் கையில் மிகுதிக்காசாக ஐந்து ரூபா எழுபது சதத்தைத் திணித்தார்.

அப்பொழுதும் கனகசபையின் உள்ளத்தில் பெரும் சக்திகளுக்கிடையில் போர் நடக்கவே செய்தது. முடிவில் தீய சக்தியே வென்றுவிட்டது. திடீரென அவனுடைய நடத்தையில் அவசரம் 'தென்பட்டது. கனகசபை, தனது கைக்கடிகாரத்தை நோக்கிய வண்ணம் "ச்ச, ச்ச ஐந்தரை மணிக்கு ஒரு ஆளைச் சந்திப்பதற்காக ஒழுங்கு செய்திருந்தேன். இப்ப 5.35 ஆகி விட்டது. சரி வாறன் முதலாளி" என்று விடைபெற்றுக் கொண் டான்.

கனகசபையின் துவிச்சக்கரவண்டி, வீட்டை நோக்கி அவனைச் சுமந்துகொண்டு செல்ல அவன் தனது நெஞ்சுச் சுமையை நீக்கத் தனக்குத்தானே சமாதானம் கூறுகிறான்.

"நான், களவெடுக்கவில்லையே' வலிய வந்ததை ஏன் விடுவான்? அதுவும், உணவுச் சாமான்களைப் பதுக்கி வைத்துக் கறுப்பு மார்க்கெட்டில் வித்துப் பணம் குவிக்கும் கடை முதலாளி கூடத் தந்த காசை எடுத்தால் ஒரு பாவமுமில்லை" இப்படித் தனது மனச்சாட்சிக்கு எத்தனையோ சமாதானங்கள் கூறி அன்று திருப்திப்பட்டுக் கொண்டான்.

அதன் பின்பு ஒரு நாள், கனகசபை முத்திரை வாங்குவதற்காகச் சுன்னாகம் தபாற்கந்தோருக்குச் சென்றபோது -

"ஐஞ்சு ரென் சென்ஸ் ஸ்ராம்ஸ் தாங்கோ பி. எம்" என்று கூறியபடி ஒரு ரூபா நோட்டொன்றைக் கொடுக்கிறான். குடும்பப் பாரம் நிறைந்த போஸ்ட்மாஸ்டர் பரமசிவத்திற்கு என்ன எண்ணம் காரணமாக ஒரு ரூபாத்தாள் இரண்டு ரூபாத்தாளாகத் தோற்றமளித்ததோ தெரியாது. 5 பத்துச் சத முத்திரைகளையும் மிகுதிப் பணமாக 1.50 சதம் கொடுத்துவிடுகிறார்.

முத்திரைகளையும் மிகுதிப் பணத்தையும் பெற்ற கனகசபை திரும்பப் பார்க்காமல் தனது துவிச்சக்கர வண்டியில் தாவி ஏறி வேகமாக மிதித்துக்கொண்டு செல்லும்போது -

"போஸ்ட் மாஸ்டர் ஆருக்கு அநியாயம் செய்தாரோ' சும்மா வந்த ஒரு ரூபாவை ஏன் விடுவான்? மாதம் 600, 700 ரூபா சம்பளம் எடுப்பவர் ஒரு ரூபாவைக் கூடத்தந்தால், குடியா மூழ்கிவிடும்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

**(4)**

திடீரென கனகசபையின் சிந்தனைச் சக்கரம் நகர மறுத்தது. உடனே அவன் தனது துவிச்சக்கர வண்டியின் சக்கரங்களையும் நகரவிடாது நிறுத்தி, அதைத் திருப்பி எதிர்ப்புறம் ஓடவிட்டதும், அவனுடைய உள்ளுணர்விலும் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது.

"சே, என்ன பாவத்தை தேடிக்கொண்டாய்? முன்பு பணக்காரர் தவறுதலாகத் தந்த பணத்தைத்தான் அபகரித்துக்கொண்டாய். அந்த ஏழை கீரைக்காரியின் ஊதியத்தைச் சூறையாடி விட்டாயே பாவி ' ஓடு, அந்தப் பாட்டாளியின் பணத்தைத் திருப்பிக்கொடு" என்று உரக்கக் கத்தியது அவனுடைய மனச்சாட்சி.

நொடிப்பொழுதில் சுன்னாகச் சந்தையின் மரக்கறிக் கடையை அடைந்த கனகசபைக்கு அங்கு ஏமாற்றமே காத்திருந்தது. கீரை விற்றுக்கொண்டிருந்த பெண்ணின் இடத்தில்

இப்போது ஓர் ஆண் நின்றுகொண்டிருந்தான். கனகசபை அவனை நோக்கி, ஆவலாக -

"இந்தாப்பா, கொஞ்சம் முந்தி இதிலை கீரைவிற்றுக் கொண்டிருந்த மனுசி எங்கே?"

"ஏன் கேக்கிறியள்?" சந்தேகப் பார்வையுடன் வினவினான் அந்த ஆள்.

"இல்லை ஒரு அலுவல்" என்றான் கனகசபை சற்றுக் குழைவாக.

" முன்பின் தெரியாத ஒரு பெண்ணுடன் மற்றவர் அறியக் கூடாத அப்பிடி என்ன அலுவல்?" சற்றுக் காரமாகவேயிருந்தது. அவனோடு கதையை நீடிக்க விரும்பாத கனகசபை சற்றுத் தூரத்தில் ஓரிடத்தில் நின்றுகொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் கீரைக்காரி எங்கிருந்தோ வந்து, அவனது இடத்தைப் பிடித்துக்கொண்டதும், அந்த முரட்டுப் பேர்வழி சற்று அப்பால் விற்றுக் கொண்டிருப்பதைக் கண்ணுற்ற கனகசபை அவ்விடத்துக்கு மகிழ்ச்சியுடன் விரைந்துசென்று -

"இந்தாணை" என்று கூறியபடி ஒரு ரூபா நோட்டொன்றை நீட்டியவாறு புன்சிரிப்பையும் உதிர்த்தான். தங்கம் வியாபாரம் செய்யும்போது எத்தனையோ பேர் வருவார்கள், போவார்கள். சிலர் சிரிப்பார் சிலர் அழுவார். அதையெல்லாம் தன்னுடைய மனத்தில் பதித்துவைக்க அவளால் எப்படி முடியும்?

தங்கம் காசைப் பெற்றுக்கொண்டு "எத்தினை பிடி ஐயா", என்று கூறியபடி இரு கீரைப் பிடிகளைக் கையில் எடுத்தாள்.

கனகசபை சிரித்தபடி "ச்ச, ச்ச, கீரை வேண்டாம் காசை வைத்துக்கொள்" என்று கூறியபடி, தனது துவிச்சக்கர வண்டியைத் தள்ளிக்கொண்டு அப்பால் நகர்ந்தான், அப்போது -

பின்னாலிருந்து ஒரு முரட்டுக்கரம் துவிச்சக்கர வண்டியின் பின் ஆசனத்தை தாவிப்பிடித்து உயரத் தூக்கிப் பத்து யார்களுக்கப்பால் வீசிய பின், கனகசபை நிமிர்ந்து பார்க்கக் கூடச் சந்தர்ப்பமளிக்காமல் அவனுடைய பிடரியைப் 'பதம்'

பார்த்துக்கொண்டிருந்தது. சுன்னாகச் சந்தையில் கலகம் என்றால் கூட்டத்துக்கு கேட்கவா வேண்டும். கனகசபையைத் தங்கத்தின் வியாபாரி முருகையான் பிடியிலிருந்து விடுவிப்பதற்குப் பெருஞ் சிரமப்பட்டு விட்டார்கள் கூட்டத்தினர்.

"ஏழைப் பெண்ணை அவ்வளவு மலிவாக மதிப்பிட்டு விட்டான் அயோக்கியன்" என்று கர்ச்சித்தபடி கனகசபையின் முகத்தையும் 'பதம்' பார்ப்பதற்குத் துடித்துக்கொண்டிருந்தான் முருகையா. அந்த ஒரு ரூபா தங்கத்தால் தனக்கு மேலதிகமாக கொடுக்கப்பட்டதென்றும், கீரை வாங்கிக்கொண்டு பாதிவழி சென்றபின் தான், தான் அதைக் கண்டுபிடித்ததாகவும் கூறி விளங்க வைத்தான் கனகசபை. ஆனால், முருகையா உட்பட அக்கூட்டத்தில் பெரும்பாலானோர் அதை ஏற்கவில்லை.

யார் கட்சியில் நியாயமிருக்கிறதென யோசிக்கவே முடியாத நிலையிலிருந்து தத்தளித்தாள் தங்கம். சிறிது நேரத்திற்கு முன் கனகசபை தன்னிடம் கீரை வாங்கினானென்ற ஒரு சிறு ஞாபகக் கீறு அவளுடைய மனத்திலிருந்தாலும், அதை அந்த நேரத்தில் எடுத்துக்கூற அவளுக்குத் துணிவு வரவில்லை.

"சரி தம்பி இனிமேல் உப்பிடிப் பிழை விடாதை, சைக்கிளை எடுத்துக்கொண்டு உன்ரைபாட்டில போ" என்று ஒரு வயோதிபக் குரல் கூறியதும், ஓட முடியாத நிலையிலிருந்த தனது துவிச்சக்கர வண்டியை ஒடிந்த உள்ளத்துடன் தள்ளிக் கொண்டு சென்றான் கனகசபை.

'உன்னுடைய நேர்மையற்ற செய்கையால் தாக்கப்படுபவன் ஏழையா, பணக்காரனா என்பதல்ல பிரச்சினை. உன்னுடைய எந்தவொரு செயலும் நேர்மையானதாகவிருக்கிறதாவென்பதுதான் பிரச்சினை' என்று அவனுடைய மனச்சாட்சி இடித்துக் கூறியது.

~ தினகரன்
23.02.1964

## 05 — மனமாற்றம்

'குட்டியனின் நிசப்பெயர், சீனிக்குட்டி. அந்த இனிப்பான பெயர் எக் காரணங்கொண்டு முன்புறத்தால் வெட்டப்பட்டும் பின்புறத்தில் ஒட்டவைத்தும் இப்படிக் கசப்பான உருவமெடுத்தது என்ற உண்மை யாழ் மண்வாசனை கமழும் எவருக்கும் விளங்கும். கொட்டில் எல்லைக்குள் நிற்கும்போது எவரும் அவனைச் 'சீனிக்குட்டி" என்றே அழைப்பார்கள். கொட்டிலிலிருந்து எட்டப் போனாலும், மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பு மிக்கவர்கள் 'சீனிக்குட்டி' என்றே பேசிக்கொள்வர். மற்றவர் 'குட்டியன்' என்பது மரபு.

சீனிக்குட்டியின் கொட்டிலுக்கு விஜயஞ் செய்வோரை 'கடன் இல்லை' என்ற பதம் பொறித்த அட்டையொன்று வாசலில் வரவேற்கும். மாதக்கணக்கில் கடனுக்குக் குடித்து வருபவர்களுக்கும், நாணமுள்ள குடிகாரரிடம் நாணமில்லாத சமயங்களில் அவர்கள் கடன் சொல்லும் போதும், இந்த விளம்பர அட்டை விதிவிலக்கு.

கந்தசாமி உயர்சாதி என்று தம்மைக் கூறிக்கொள்ளும் இந்துக் குடும்பமொன்றில் பிறந்தவன். ஆனால் ஒழுக்கத்தில் அவன் உயரவில்லை. தேகச் சூட்டைத் தணிப்பதற்காக, அவன் தனது பெற்றோரின் சம்மதத்துடன் பருக ஆரம்பித்த பனங் கள் காலப்போக்கில் தாகம் எடுத்த நேரமெல்லாம் அவனுடைய மனக்கண்முன் நர்த்தனமாடத்தொடங்கிவிட்டது.

அன்று கந்தசாமி சீனிக்குட்டியின் தண்ணீர்ப் பந்தலில் தாகசாந்தி செய்துகொள்வதற்காகப் போயிருக்கிறான்.

"சீனிக்குட்டி ஒரு தென்னை கொண்டு வா."

"அண்டையில் இரண்டு போத்தல் காசும் வைச்சாத்தான் இண்டைக்குக் கிடைக்கும்"

"காசு கிடக்கு ஒரு தென்னை கொண்டு வா"

"எங்கை இப்படிக் காசை வையும்" என்று கையை நீட்டினான் சீனிக்குட்டி.

"இதென்ன நம்பிக்கையில்லாமல் கதைக்கிறாய் இந்தா" என்று கூறியவாறு மடியிலிருந்த சில்லறை நாணயங்கள் அத்தனையும் எடுத்துச் சீனிக்குட்டியின் கையில் திணித்தான் கந்தசாமி.

சில்லறை நாணயங்களைப் பக்குவமாக எண்ணி முடித்த சீனிக்குட்டி,

"சரி, ஒரு ரூபா இருபது சதமிருக்கு அண்டையில் இரண்டின் காசும் சரி, இப்ப தாறதுக்குக் காசை வையும்" என்று கையை நீட்டினான்.

"ஒண்டு கொண்டுவா, நாளைக்குத் தாறன்"

"ச்ச, ச்ச, அந்த போட்டைப் பாரும், அதையும் மீறி உமக்கொரு ஆளுக்குத்தான் நான் கடன் தாறது. மற்றநாள் தாறதெண்டு சொன்ன காசை ஒரு கிழமை கழிச்சு இப்ப தாறீர். இந்தக் காசும் எப்ப தருவீரோ? இனிமேல் கடன் எண்ட பேச்சில்லை" என்று நெஞ்சைக் கல்லாக்கிக் கூறிவிட்டான் சீனிக்குட்டி.

"உன்னாணை நாளைக்குத் தாறன் ஒன்று கொண்டுவா" நாவிற்கு அடிமைப்பட்ட கந்தசாமியுடைய நப்பாசையின் எதிரொலி.

இல்லை என்பதற்கு அறிகுறியாகச் சீனிக்குட்டியனின் சிரம் பக்கவாட்டில் மூன்று நான்கு முறை அசைந்தது.

விலைமாது ஒருத்திக்கு பணத்தை அள்ளி அள்ளி வீசிய பின்னும் இன்பம் நுகர முடியாத முழு ஏமாற்றம் கந்தசாமிக்கு. பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற வெறி அவனுடன் கூடச் சென்றது.

சீனிக்குட்டிக்கு உள்ளது ஒரே ஒரு மகன் அதுவும் விவாகமாகிப் பன்னிரண்டு வருடங்கள் குழந்தையில்லாமல் தவங்கிடந்து பதின்மூன்றாம் வருடம் அருமையாகப் பிறந்த பிள்ளை, அந்தக் குழந்தைக்கு "அருமைத்துரை" என்று பெயரிட்டனர் பெற்றோர்.

வருடங்கள் ஐந்து உருண்டன. ஆரம்பக் கல்விக்காக அருகாமையிலிருந்த தமிழ்க்கலவன் பாடசாலையொன்றில் மகனைச் சேர்த்தான் சீனிக்குட்டி. அருமைத்துரை ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகத் தேறிக்கொண்டே வந்தான். அவனுக்கு ஒன்பது வயது பூர்த்தியாகும் போது, தமிழ்ப் பாடசாலையிலுள்ள கடைசி வகுப்பான ஐந்தாம் வகுப்பிலும் சித்தியடைந்துவிட்டான்.

பிறகு -

அருமைத்துரை, கிறிஸ்தவ மதத்திலும், உடுவில் ஆங்கில பாடசாலையிலும் சேர்ந்து வருடங்கள் ஆறு நகர்ந்துவிட்டன. அவன் ஆங்கில சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோன்றவேண்டிய காலமும் வந்தது. பரீட்சைக்கு மனுச் செய்வது சம்பந்தமாக, பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று வேண்டுமென்றார் பாடசாலை அதிபர். சீனிக்குட்டி இரண்டு ரூபாக்களுக்கு முத்திரையொட்டி, மகனின் பிறப்புச் சான்றிதழுக்கு மனுச் செய்திருந்தான்.

இரண்டு வாரங்கள் கழித்துத் தபாலில் வீடு தேடி வந்திருந்த பிறப்புச் சான்றிதழில் தங்கள் தவப்புதல்வனுக்கு ஆசையுடன் சூட்டிய நாமம் உருவிழந்திருந்ததைக் கண்ட பெற்றோரின் உள்ளங்கள் வெதும்பின. பிறப்புச் சான்றிதழின் பிரகாரம் "அருமைத்துரை", "துரையன்" என்று காட்சி அளித்தான்.

சந்தர்ப்பவசத்தால், "வலது குறைந்த " ஒரு சமூகத்தில் பிறந்ததைத்தவிர வேறோர் குற்றமுமறியாத அந்தத் தம்பதிகளின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

"பிரதம பதிவாளருக்கு மனுச்செய்தால் பெயரை மாற்றி விடலாம், என்று யாரோ ஒருவர் கூறிய ஆறுதல் வார்த்தையில் சாந்தி அடைந்தனர், சீனிக்குட்டியும் மனைவியும்.

சீனிக்குட்டி, வெள்ளைவேட்டியும் நீளக்கைச்சட்டையும் அணிந்திருந்தால், அன்று அவன் தனது கிராமத்திற்கு வெளியே புறப்படுகின்றான் என்று அர்த்தம். அன்றும் சீனிக்குட்டி, வெள்ளைவேட்டியும் நீளக்கைச்சட்டையும் அணிந்துகொண்டு மகனின் பெயர்மாற்ற விசயமாகக் கச்சேரிக்குப் பயணமானான். சுன்னாகத்திலிருந்து பஸ்ஸில் புறப்பட்ட சீனிக்குட்டியைக் கவனித்த கந்தசாமி, சீனிக்குட்டிக்குத் தெரியாமல் அவனைப் பின் தொடர்கிறான்.

காலையில் சுமார் எட்டரை மணியளவில் புறப்பட்ட சீனிக்குட்டி, கச்சேரியில், மகனின் பெயர் மாற்றத்திற்கு மனுச்செய்யும் விசயத்தை முடித்துக்கொண்டு பெரிய கடை வந்தடைய பிற்பகல் இரண்டு மணியாகிவிட்டது.

காலையில் வெறும் தேநீர் மட்டும் அருந்திவிட்டு வந்த சீனிக்குட்டிக்கு, பசியும் தாகமும் உடலைப் பிடுங்கித்தின்றன. அந்தி வெயிலின் வெப்பத்தால் அணிந்திருந்த சட்டையை வியர்வை நனைத்துவிட்டபடியால், சட்டையின் கைகளைச் சிறிது மடித்துவிட்டுக் கொண்டான். நாவோ வறண்டுவிட்டது. தாகத்திற்கு ஏதாவது பருகாவிட்டால் மயக்கம் போட்டுவிடக் கூடிய நிலை.

"நானும் மனிதன் என்ற சுயமரியாதையைக் காப்பாற்றி, குட்டு வெளிப்பட்டால் நையப்புடைக்கப்படும் அபாயத்தையும் எதிர்நோக்கி, ஒரு தேநீர்ச் சாலையினுள் புகுந்து சமமாக அமர்ந்து ஏதாவது பருகித் தாகத்தைத் தீர்த்துக் கொள்வதா?" அல்லது "மிருகதமாக ஒரு தேநீர்க்கடைக்கு வெளியே நின்று போத்தலில் ஏதாவது பானம் பருகுவதா?" என்ற இரு கேள்விகள் சீனிக்குட்டியின் முன் தோன்றின.

முன்னைய அபாயகரமான முயற்சியையே தேர்ந்தெடுத்து, ஒரு தேநீர்க் கடையினுள், பிரவேசிக்கும் போது, மடித்துவிடப்பட்டிருந்த தனது சட்டையின் கைகளை நீட்டிப்

பொத்தான் பொருத்திக் கொண்டான். உள்ளே சென்றவன் ஒரு நாற்காலியில் அமர்ந்ததும், சிப்பந்தி ஒருவன் ஓடோடி வந்து " என்ன சாப்பிடுகிறியள்" என்று அன்பாக விசாரித்தான்.

சீனிக்குட்டி சுருக்கமாக முடிக்க எண்ணி,

"ஒரு பால்த்தேத்தண்ணி" என்றான்,

வியாபாரத் தந்திரம் தெரிந்த கடைச் சிப்பந்திக்கு சீனிக் குட்டியின் சாதி தெரிந்திருந்தால் திரும்பவும்,

"சாப்பிடுவதற்கு என்னண்ணை கொண்டுவர" என்று அன்பாகவும் பண்பாகவும் கேட்டிருக்கமாட்டான்.

"வந்து முடிஞ்சுதாம் இனிக் குடிச்சாலும் சாப்பிட்டாலும் ஒண்டுதான்" என்று எண்ணிய சீனிக்குட்டி,

"இரண்டு உழுந்துவடை கொண்டாருங்கோ" என்றான். சில வினாடிகளில் சூடான உழுந்துவடைகள் இரண்டு சீனிக் குட்டிக்கு முன் மேசையில் வைக்கப்பட்டன.

ஒருபக்கம் மிதமிஞ்சிய பசி, மறுபக்கம் தன்னைத் தெரிந் தவர் காணுமுன் புறப்பட்டுவிட வேண்டும் என்ற இரு காரணங் களினாலும், வைத்த இரு வடைகளையும் நொடிப்பொழுதில் சாப்பிட்டு விட்டபோது தான், முதலாளியின் மேசையருகில் தனக்குத் தெரிந்த ஒரு உருவத்தைக் கண்டான் சீனிக்குட்டி, மறுகணம் அவ்வுருவம் கடையைவிட்டு வெளியே சென்று விட்டது. சீனிக்குட்டிக்கு அவன் சாப்பிட்ட வடை உடனே செமித்துவிட்டது: முகத்தில் முத்துக்களாய் வியர்வை அரும்பின.

திரும்பிவந்த கடைச் சிப்பந்தி, மேலும் மூன்று உழுந்து வடைகளையும், இரண்டு கப்பல் வாழைப்பழங்களையும் சீனிக் குட்டியின் முன் வைத்துவிட்டு, "நல்ல பசிபோலையிருக்கு நல்லாய்ச் சாப்பிடுங்க அண்ணை" என்றான்.

"இதென்னடாப்பா புது முறையா உபசரிக்கிறாங்க, சாப்பாடு வயிறு நிறையத் தந்திட்டுத்தான் உதைக்கப் போறாங் களாக்கும், ஏதோ நடப்பது நடக்கட்டும்" என்று எண்ணியவாறு,

வடைகளை ஒன்றன்பின் ஒன்றாக உள்ளே செலுத்திக் கொண்டேயிருந்தான் சீனிக்குட்டி, பிறகு வைத்த வடை மூன்றையும் தீர்த்துக் கட்டியதும் பால்கோப்பி வந்தது. மேசையில் சீனிக்குட்டிக்கு வயிறு நிறைய நிறையப் பயமும் அதிகரித்துக் கொண்டே போனது. மனத்தை ஒருவிதமாய் தேற்றிக்கொண்டு காப்பியும் குடித்து முடிந்ததும், கணக்குத் தீர்ப்பதற்காக மேசையருகில் சென்று கணக்கு எவ்வளவு" என்றான் சீனிக் குட்டி.

'"அதெல்லாம் உங்களுக்குத் தெரியாமலே, உங்க சிநேகிதர் ஒருவர் கட்டிவிட்டுப் போட்டார் நீங்க போங்க" என்றார் முதலாளி. தனக்காகப் பணங்கொடுத்தது, சற்று முன்பு முதலாளியின் மேசையருகில் நின்றுவிட்டுச் சென்ற கந்தசாமி என்று அறிந்ததும் சீனிக்குட்டிக்கு எல்லாம் ஒரே குழப்ப மாயிருந்தது.

"பகைவருக்கும் நன்மை செய்யும் அளவிற்கு திருந்தி விட்டானா கந்தசாமி? அன்றிச் சமூகமே மாறிவிட்டதா? அல்லது நான்தான் மாறிவிட்டேனா?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான் சீனிக்குட்டி. அன்று தான் கடன்காசைப் பெற்றுக் கொண்டு அவனுக்குக் கடனுக்குக் கள் கொடாதது அனுப்பிய குற்றத்திற்கு, தர்மமான மனிதாபிமான நாகரீகமான முறையில் தண்டனை கொடுத்துவிட்டானே கந்தசாமி." என்று அவனுடைய உள்ளம் அழுதது.

அன்று வெள்ளிக்கிழமை சந்தை நாள். சுன்னாகச் சந்தை மனித வெள்ளத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. காய்கறி வாங்குவதற்காகச் சந்தைக்குச் சென்ற சீனிக்குட்டி, தற்செயலாகக் கந்தசாமியைச் சந்திக்கிறான். கந்தசாமியின் தோள்களைத் தனது வலக்கரத்தால் அணைத்தவாறு,

"தம்பி என்னுடைய கொட்டிலுக்கும் ஒரு தரம் வந்திட்டுப் போகவேணும்" என்று இரங்கினான் சீனிக்குட்டி.

கந்தசாமிக்குத் தன் காதுகளை நம்பமுடியவில்லை.

"ஏன் நீதானே கடன் குடுக்கிறதில்லை" என்றான்.

"தம்பி அண்டைக்கு நடந்ததை மன்னிச்சிடும். ஏதோ தவறுதலாய்ச் செய்திட்டன்."

கந்தசாமிக்கு மேலும் குழப்பமாயிருந்தது. அவன் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிக் கடத்தவே பார்த்தான். ஆனால் சீனிக்குட்டி விட்டபாடில்லை.

"கொட்டிலில் ஆட்களை அடுக்குப் பண்ணி வைத்து விட்டு என்னைக் கூட்டிக்கொண்டு போய் அடிக்கப்போகிறானா?" என்றும் ஒரு கால் எண்ணினான் கந்தசாமி. இருந்தும் அவனுடைய சுயமரியாதை இடம் அளிக்கவில்லை. "அளவுக்கு மிஞ்சினால் தன்னுடைய மடியில் இருக்கிற ஆயுதத்தால் முண்டுகிறவனைத் தீர்த்துக்கட்ட வேண்டியது தான்" என்று திடப்படுத்திய எண்ணத்துடன் சீனிக்குட்டியுடன் செல்ல இசைந்தான்.

இருவரும் கொட்டிலை நோக்கி மௌனமாக நடக்கின்றனர்.

கந்தசாமிக்கு இருப்பதற்கு ஒரு பலகை போடப்பட்டதும் ஒரு போத்தல் 'தென்னை' பரிமாறப்படுகிறது.

'வெறி ஏத்திய பின் நொருக்கப் போறாங்களா? ச்ச, அப்பிடியெண்டால் சீனிக்குட்டியையும் சின்னப்பையன் ஒருவனையும் தவிர வேறொருத்தரையும் காணவில்லையே கொட்டிலில், சிலவேளை ஆட்களை மறைத்து வைத்துவிட்டு வேஷம் போடுகிறானா சீனிக்குட்டி? எதற்கும் பார்ப்பம்' என்று எண்ணிக் கொண்டே ஒரு போத்தல் தென்னங்கள்ளின் கடைசிச் சொட்டையும் உருசி பார்த்தான் கந்தசாமி.

"இன்னொரு "தென்னை" கொண்டு வந்து தம்பிக்குக் குடடா" என்று ஆணை பிறக்கிறது சீனிக்குட்டியிடமிருந்து

"ஐயோ வேண்டாம் சீனிக்குட்டி"

"ச்ச, ச்ச அப்ப அரை கொண்டுவந்து வாரடா"

கடைசியாகக் கொடுக்கப்பட்ட 'அரையும்' முடிந்ததும் மடியிலிருந்து ஒரு ரூபா நோட்டை எடுத்து சீனிக்குட்டியிடம் நீட்டினான் கந்தசாமி.

"ச்சீ, ச்சீ இதென்ன காசுக்காகவா உம்மை வலிஞ்சு கூட்டிக்கொண்டு வந்தனான். அண்டைக்குப் பட்டணத்திலை நீர் செய்த மரியாதையை என் உயிர் உள்ளவரைக்கும் மறப்பேனா? என்ரை மானத்தைக் காப்பாற்றியது மல்லாமல், நான் சாப்பிட்ட காசையுமல்லே குடுத்திட்டு வந்தனீர். உம்மைப் போலை பத்துப்பேர் ஒவ்வொரு அயலிலும் இருந்தால் இந்தச் சாதி என்கிற வியாதி தமிழற்றை மத்தியிலையிருந்து பார்த்துப் பார்த்து ஓடாதே...."

கந்தசாமிக்கு விசயம் இப்போது தான் புரிந்தது. தேநீர்கடை முதலாளிக்கு சீனிக்குட்டியைக் குறிப்பால் காட்டி அந்த ஆளுக்கு நல்ல சாப்பாடு குடுத்து அனுப்புங்கோ பிறகு வாறன்' என்று தான் கூறியதை அவர் தவறாகப் புரிந்துவிட்டார் என்ற உண்மை புலனாயிற்று. 'அந்தத்தவறும் நன்மையையே அளித்திருக்கிறது' என்று எண்ணிய கந்தசாமி,

"இனிமேலெல்லாம் சீனிக்குட்டி, நாங்கள் பழைய பிடிய ளைக்கைவிடாவிட்டால் எங்கள் சமூகத்திற்கு விமோசனமே இல்லை. என்ரை மனமாற்றத்திற்குக் காரணம் உன்ரை அன்பு. அன்பாலை என்னதான் சாதிக்க முடியாது சொல்லு பாப்பம். சீனிக்குட்டி" என்றதும்,

"அது சரிதான்" என்று ஆமோதித்தான் சீனிக்குட்டி.

~ சுதந்திரன்
27.02.1966

## 06———————— சாரதாவின் கணவன்

சா வீட்டு ஓலம் அஸ்தமித்து ஒரு மணித்தியாலம் கடந்துவிட்டது.

நேரம் அதிகாலை மூன்று மணியென சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் மும்முறை ஓலமிட்டது.

"கோடி பணங்கிடந்தும் என்ன பலன், இப்ப கொள்ளி வைக்க ஒரு பிள்ளையில்லாமல் மனிதன் கண்மூடிவிட்டது"

"பாவம் சீவன் பிரியேக்கை நிம்மதியாய்க் கண் மூடியிருக்காது."

"அந்த நல்ல மனிசன்ரை அடி அழியாமல் கண்கெட்ட கடவுள் ஒரு கொந்தலைக் குடுக்கேல்லை."

"நீ என்னவோ நல்ல மனிசன் என்கிறாய், தன்னை ஆக்களுக்கு ஒண்டும் வையாமல், அந்தத் தேப்பனைத் தின்னிப் பெடியனுக்குத்தான் எல்லாத்தையும் எழுதிவைச்சிட்டுப் போட்டு தாம் அந்தாள்"

"உன்ரை கதையென்ன, நல்ல மனிசன் எண்டால் அப்படித்தானிருக்கவேணும். அந்த மனிசன் தன்ரை ஒரேயொரு தங்கைக்கு எவ்வளவு சீதனம் குடுத்துச் சிறப்பாய்க் கலியாணம்

கட்டி வைச்சிது. இரண்டு பிள்ளையளைப் பெத்தாப் பிறகும் ஒரு கார்க்காறனோடை ஓடிவிட்டாள் அவள். அப்பிடிப்பட்டவளுக்கும் அந்தாள் எழுதிவைக்கேல்லை யெண்டே சொல்லுறாய்?"

"என்ன இருந்தாலும் ஒரு ரத்தமல்லே"

" நீதி ஞாயம் உள்ளவன் இரத்தம், பிறத்தி யெண்டு பார்க்கமாட்டான். அது தறுமமோ தூ எங்கட கடவுளுக்குப் பொறுக்கக்கூடியதோ அதைத்தான் செய்வன்"

"மனிசன்ரை கடையும் சாமானும் மட்டும் ஒரு லச்சம் பெறுமாமே".

"ஓ அது மட்டுமே, வங்கியிலை ஐம்பதாயிரம் கட்டி யிருக்காம். "

"இவ்வளவு ஆரோ ஒருத்தன்ரை பிள்ளைக்குப் போகுது"

"ஓ அதுக்கென்ன, அந்த மனிசன் உசிரோடை இருக் கேக்கை அடிக்கடி சொல்லும்" ஒழுக்கமுள்ளவை தான் எனக்கு உருத்தானவை, மற்றவையெல்லாம் பிறத்தி எண்டு அந்தாள் தான் மனிதன் சொன்னது போலைச் செய்திட்டிது."

அடுத்தவரின் மரண வீட்டில் அரட்டை அடிப்பதற்கென்றே வந்த அந்த இரு வயோதிபப்பெண்கள் கூட நித்திராதேவியின் மயக்கத்தின் தாக்கத்தை எதிர்த்து நிற்கமுடியாமல் ஒரு மூலை யில் சாய்ந்துவிட்டனா.

சாரதாவின் கணவன் ஒரு பிரபல வர்த்தக ஸ்தாபனத்தின் உரிமையாளன். காலையில் தனது மோட்டாரில் அலுவலகத் திற்குச் சென்றவன், மாலையில் பிணமாக வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டான்.

" நல்ல மனுஷன் படுக்கையில் கிடவாமல் மாரடைப் பினால் செத்துப்போனான். " என்று ஊர் பேசிக்கொண்டது.

கொழும்பிலிருந்து ஒரு சில உறவினரின் வருகைக்காக ஈமக்கிரிகைகளை மறுநாளுக்கு ஒத்திப்போட வேண்டிய தாயிற்று.

வீட்டின் நடுச்சாலையில் போடப்பட்டிருந்த கட்டிலில் வெண்துயிலால் முகம் நீங்கலாக மூடப்பட்டுத் துயில் கொள்ளும் பாவனையில் கிடந்தது சாரதாவின் கணவனின் பூதவுடல். தலை மாட்டில் எரிந்துகொண்டிருந்த குத்துவிளக்கின் சலனமற்ற ஒளி பிணத்தின் முகத்தைத் தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தது.

கட்டிலின் இருபுறத்திலும் பக்கத்திற்கொருவராய் சாரதாவும் நளினியும் சோகமே உருவெடுத்தாற்போல் அமர்ந் திருந்தனர். நளினி தன் மடியில் உறங்கிக்கொண்டிருந்த மூன்று வயதுப் பாலகனை வலக்கரத்தால் அணைத்தவாறு, இடக் கரத்தை நாடிக்கு முண்டுகொடுத்து, உணர்ச்சிப் பெருக்கில் ஊற்றெடுக்கும் கண்களால் பிணத்தின் முகத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்தாள்.

சாரதாவின் வெறித்தபார்வை குத்துவிளக்கின் சுடரில் நிலைகுத்தி நிற்க அவளுடைய சிந்தனையும் சுடர் விட்டெரிந்து கொண்டிருந்தது.

பத்து வருடங்களுக்கு முன் அவளுடைய கணவன் தொழில் சம்பந்தமாக கொழும்பு சென்றிருந்தபோது அங்கிருந்தே அவளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான்.

"என் சாரதா,

கடந்த எட்டு வருடங்களாக என் மனதில் குமைந்து கொண்டிருந்த ஒரு எண்ணம் பற்றி நேரில் உன்னிடம் பேசத் திராணியற்று இவ்விடம் வர நேர்ந்ததைப் பயன்படுத்தி அதை உனக்கு எழுதுகிறேன். தீர ஆலோசித்து நீயொரு முடிவுக்கு வரவேண்டும். எனது முடிவுக்கு உனக்கு இஷ்டமில்லாது போனால், நான் பிரஸ்தாபிக்கப் போவதையே மறந்துவிடு, அதற்கு நீயும் இஷ்டப்படுவாயாகில் நாங்கள் இருவரும் பாக்கிய சாலிகள்.

மனிதன் மண்ணில் தோன்றி, வாழ்ந்து மடிகிறான். அவன் வாழ்ந்து மடிந்து போனபின்பும் அவனுடைய அடிச்சுவடுகள் இருக்கவேண்டுமென்பதில் எனக்கு இருக்கும் ஆசை அளவில் லாதது. எனது அந்த ஆசையில் உனக்கு ஆசையில்லா விட்டால்

அதைக் கருவிலேயே அழித்துவிடவும் சித்தமாயிருக்கிறேன். என்னுடைய இந்த நோக்கத்தால் உன்பால் எனக்கு இருக்கும் அன்பு ஊற்றுக் குறைந்துவிட்டதோ, அன்றி வற்றிப்போய் விட்டதே. நீ என்றும் என்னுடையவள். நான் என்றும் உன்னுடையவன். நாங்கள் மணமுடித்து 18 ஆண்டுகளாகியும் எங்கள் வாழ்க்கை பசுந்தளைவிடாது பாலைவனமாகவேயிருக்கிறது. எங்களுக்கு இறைவன் இது தலைமுறைகளுக்குப் போதுமான செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். ஆனால் இத்தனையுமிருந்தும் என்ன பயன்? நாளைக்கு நீயும் நானும் இருந்தாற்போல் கண்களை மூடிவிட்டால் ஒழுக்கங்கெட்ட சோம்பேறிகள் எத்தனைபேர் நாங்கள் பாடுபட்டுத் தேடிய தேட்டங்களுக்குச் சொந்தங் கொண்டாட வருவார்கள் என்பதை எண்ணவே என் நெஞ்சம் வெடிக்கிறது.

சாரதா, பதட்டமடையாது நிதானமாக சிந்தித்து ஒரு முடிவுக்கு வா. உன் ஒரே ஒரு தங்கைக்கு இப்பொழுது வயது 27 ஆகிறது. நாங்கள் எவ்வளவு சீதனம் கொடுத்தும் நளினியை ஒரு நல்ல இடத்தில் கட்டிவைக்கத் தயாராக இருக்கிறோம். இருந்தும் அவளின் காலொன்று சற்று ஊனமாயிருப்பதால், சமத்துவம் முற்போக்குப் பேசும் வாலிபராவது அவளை மணக்க முன்வருகிறார்களில்லை. நீ என்னைத் 'துரோகி' யென்று சொன்னாலும் பாதகமில்லை என்று எண்ணக்கூடிய ஒருவனாக நானிருந்தால், நான் எத்தனையோ சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அந்தப் பட்டத்தைப் பெற்றிருப்பேன். ஆனால் உன் வாயிலிருந்து அந்த வார்த்தையைக் கேட்க நான் ஒருபோதும் ஒருப்படேன்.

நீ மட்டும் சம்மதித்தால் உன் தங்கை வாழாவெட்டியாக இருக்கவேண்டாம்.

எங்கள் செல்வமும் பாழாகிப்போக வேண்டாம். உன் வயிற்றில்தான் ஒரு குழந்தையும் பிறக்கவில்லை. உன் தங்கையின் வயிற்றில் பிறக்கும் குழந்தையும் எங்கள் குழந்தையாகவேயிருக்கும். உனக்குச் சம்மதமென்றால் உன் தங்கை நளினியை நான்....

மேற்கொண்டு அந்தக் கடிதத்தை வாசிக்க சாரதாவால் முடியவில்லை. கடிதத்தை சுக்குநூறாகக் கிழித்து அடுப்பிலிட்டுச் சாம்பராக்கி விட்டாள்.

அடுத்த கணம் தங்கையின் மயிரில் பிடித்து உலுப்பி " என் கஞ்சியைப் பறித்துக் குடிக்க நினைத்தியாடி சண்டாளி, உன்னைப் பெத்தவங்க உயிரோடிருக்கும் போதே உன்னைக் கரைசேர்க்காமல் போனது என் வாழ்க்கையைக் கெடுக்கவா" என்று பொரிந்து தள்ளினாள்.

நளினிக்கோ ஒன்றும் புரியவில்லை. பிரமித்துப் போனாள் நளினி "தனக்கொன்றும் தெரியாது" எனச் சத்தியம் செய்து கொடுத்ததன்பின் சாரதா ஒருவாறு அமைதியுற்றாலும், கணவனை சபிப்பதற்கு உள்ளுக்குள்ளாகப் புகைத்துக்கொண்டிருந்தாள்.

கொழும்பிலிருந்து திரும்பிய கணவன் தனது மனைவியின் கண்களிலிருந்து வெடித்த கனலை தன் இதழ்களின் கோணத்தில் அரும்பி புன்னகையால் தணிக்க முயன்றும் பயனில்லை.

....'துரோகி' "இத்தனை காலமும் போலி வேடமா போட்டீங்க. ஒழுக்கம் ஒழுக்கம் என்று சதா செபிக்கும் உங்களை நம்பியல்லவா நளினியை என்னுடன் வைத்திருந்தேன். அந்த நம்பிக்கைக்குத் துரோகஞ் செய்து அவளை கெடுத்துவிட்டியளா பாவி...." என்று கத்திப் பத்திரகாளியாக மாறிவிட்டாள் சாரதா.

அத்தனை விநயமாகவும் `விளக்கமாகவும் எழுதிய கடிதத்தைப் படித்த பின்பும் தன்னை 'துரோகி' எனக் குற்றஞ் சாட்டிய மனைவிக்குத் தான் நிரபராதியென்று காட்டிக் கொள்ளவே அவன் விரும்பவில்லை. அன்று முழுவதும் அவன் அனுசரித்த மௌனம் அவர்களின் மனப்புண்ணின் வலியைச் சிறிது போக்கியது. அப்புறம், காலம் அவர்களின் மனப் புண்ணையே மாற்றிவிட்டது.

சாரதாவின் குடும்பத்தில் சகச நிலையை ஏற்படுத்திய காலம் சும்மாயிருக்கவில்லை. ஏற்கனவே வாழ்விழந்த ஒருவனால் அவளுடைய தங்கை நளினிக்கும் வாழ்வளித்தது.

நளினிக்கு வாழ்வளித்த காலம், அவளுக்கு ஒரு மகவையும் அளித்த ஆண்டில், அவளுடைய கணவனை ஒரு மோட்டார் விபத்தில் சிக்க வைத்து அவனையும் பறித்துக்கொண்டது.

நளினியின் கணவன் இறந்த இரண்டு ஆண்டுகள் பூர்த்தியானதும் சாரதாவின் கணவனையும் காலன் பறித்துக் கொண்டான். சாரதாவின் கணவன் மரித்த அன்று காலை அலுவலகத்திற்குப் போய்ச் சிறிது நேரத்தால் அவனுக்கு மார்புவலி ஏற்பட்டதாம். உடனே அவன் நம்பிக்கைக்குப் பாத்திரமான தனது ஊழியர் ஒருவரை அழைத்து இரும்புப் பெட்டியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து தனக்கு ஏதாவது நேர்ந்தால் அதை மனைவியிடம் சேர்ப்பிக்கும்படியும் கூறியிருந்தானாம். அக்கடிதத்தில் கண்டது.

"என் சாரதா,

இதை உன் தங்கையின் கணவன் இறந்த ஒரு மாதத்தின் பின் எழுதுகிறேன். இனிமேல் எங்களுக்குக் குழந்தைகள் பிறக்கப் போகிறதல்ல நளினிக்கு ஒரு ஆண்குழந்தை கிடைத்ததும், அவள் கணவனை இழந்து விட்டாள். எனக்குச் சேர வேண்டிய சொத்துக்கள் அத்தனையும் எனக்குப்பின் நளினிக்கும் மகனுக்கும் சேர வேண்டுமென எழுதப்பட்ட எனது உயில் இரும்புப் பெட்டியில் இருக்கிறது. உன்னுடைய பாகமும் உனக்குப்பின் உன் தங்கைக்கும் மகனுக்கும் தானே. அதை உன்னுடைய விருப்பம் போலச் செய்துகொள்,

இப்பொழுது நான் பலவருடங்களுக்கு முன் ஒரு முறை கொழும்பு சென்றிருந்தபோது, அவ்விடமிருந்து எழுதிய நீண்ட கடிதத்தின் நினைப்பு வருகிறது. அதை எனக்கு அப்பொழுதிருந்த மகப்பேறு ஆசை வெறியில் ஜெனித்த சபலத்தினால் எழுதினேனேயொழிய உன் தங்கையை அடைய வேண்டுமென்ற இச்சையல் எழுதவில்லை. உன் தங்கை நளினியின் மேனியில் என்கை இன்றுவரையும் படவேயில்லை என நான் சத்தியம் செய்கிறேன். அந்தச் சம்பவம் எனக்கும் உலகிற்கும் ஒரேயொரு

பாடத்தைத்தான் கற்பிக்கிறது. அதாவது ஒருத்தி தன் கணவனை தான் ஒருத்திக்காக சொந்தமாக்கிக் கொள்வாளே தவிர கதைகள் காவியங்களில் வரும் ஏமாளிக் கற்பனைப் பாத் திரங்களைப் போல் தான் இறக்குந் தறுவாயிலும் தனது கணவனைத் தன்உடன் பிறந்த சகோதரிக்குத் தன்னும் தத்தம் செய்யமாட்டாள் என்பதே.

மறுநாள் பொழுது புலர்ந்தது. கொழும்பிலிருந்து வர வேண்டிய உறவினர்கள் வந்ததும் சாரதாவின் கணவனின் பூதவுடல் தகனஞ் செய்யப்படுவதற்காக ஆயத்தங்கள் செய்யப்பட்டன. 'பிணத்திற்கு கொள்ளி வைப்பது யார்" என்ற பிரச்சினை எழுந்தது. நளினி தன் மூன்று வயதுப் பாலகனை கொள்ளி வைக்க வேண்டுமென விரும்பினாள். ஏன் அந்தாள் தேப்பனெண்டாலல்லே பெடியன் கொள்ளி வைக்கலாம்' என்று ஒரு நச்சுக்கிழவி முணுமுணுத்தது நளினிக்கோ சாரதாவுக்கு கேட்டிருக்காது. இருந்தும் சாரதா நளினியின் விருப்பத்திற் கிணங்கவில்லை. பெண்கள் பல சந்தர்ப்பங்களில் வீட்டிலிருந்து பிரேதம் புறப்படும்போதே பாடையினுள் ஒரு கொள்ளிவைத்து விடுவதுபோல் தானும் செய்ய வேண்டுமெனச் சாரதா விரும் பினாள். அவளின் விருப்பும் நிறைவேறியது.

- சுதந்திரன்
23.05.1967

## 07 இரும்புக்கரம்

"டாங், டாங்."

"ஐயா"

"டாங், டாங்"

"ஐயா, ஐயா."

"உய்ய்...."

மணியோசை நின்று, பச்சைக்கொடியும் காட்டி விசிலும் ஊதியாய் விட்டது.

"தம்பி மேனை ஓடிப்போய் கொஞ்சம் நிக்கச் சொல் லடா."

அருகால் நடந்துகொண்டிருந்த ஒரு தொழிலாளியைப் பார்த்துக் கெஞ்சினாள் பொன்னி.

"அது விசில் அடிச்சிட்டுதணை எங்கை நிக்கப்போகுது" தொழிலாளியின் விளக்கம்.

தலையில் சுமந்திருந்த மீன் கடகத்தின் பாரம் பொன்னியின் கழுத்தை தோள்ப்பட்டையினுள் புதைக்க கழுத்து நரம்புகள் விம்மிப் புடைத்தன.

புகையிரத நிலையப்படிக்கட்டுகளுக்கு இன்னும் சுமார் 20 யார் தூரந்தானிருக்கும். பொன்னி தன்னால் இயன்ற மட்டும் எட்டி அடிவைக்கிறாள். ஆனால் தலைப்பாரம் கால்களைப் பின்னுக்குச் சுண்டியிழுத்தன.

"கூ கூ...."

புகைவண்டி "புறப்படப் போகிறேன்" என்று கூறியது.

"ஐயா ஆ...."

பிரசவ வேதனையின் உச்சஸ்தானத்தை அடைந்த ஆட்டினுடைய அவலக்குரலின் சாயல்.

புகையிரத நிலையமேடையின் படிக்கட்டுகளை நெருங்கி விட்டாள் பொன்னி. புகைவண்டி கரும்புகை கக்கி நகர ஆரம்பிக்கிறது.

பொன்னியின் இதயம், ஏலவிற்பனைக்காரனின் சிறு சம்மட்டியால் அடிக்கப்படும் வெண்கலத் தட்டுப் போலிருந்தது. தன் சக்தி எல்லாவற்றையும் ஒன்று திரட்டி பார்ப்போர் மனம் கசிந்துருகும் வண்ணம்.

"ஐயா ஆ..." என்று தீனக் குரலில் அலறுகிறாள்.

புகைவண்டி பெருமூச்செறிந்து தனது வேகத்தை அதிகரித்தது.

பொன்னியின் நம்பிக்கை சிதறுண்டது. அவளுடைய இதயம் சுக்குநூறாக வெடித்து அணுவணுவாய் தெறித்தது' அவள் படிக்கட்டில் வைத்து கால் தவறி நிலத்தில் நெடும்பனை போல் வீழ்கிறாள்.

மீன்கடகம் ஒரு புறத்தில் வீசப்பட்டு அதிலிருந்த மீன்கள் மேடையை விண்மீன்களைப் போல் அலங்கரித்தன.

* * *

துறையூர் மீன்பிடிக்கு பெயர்பெற்ற ஒரு துறைமுகம். கடற்கரைக்கு எட்டாத தூரத்திலிருக்கும் ஏழைப்பெண்கள் அந்தத் துறைமுகத்தில் மீன்வாங்கிச் சென்று, தங்கள் கிராமங்களில் அவைகளை விற்றுப் பிழைப்பார்கள். துறையூருக்குச்

சுமார் முக்கால் மைல் தூரத்திற்றான் நெல்லியூர் புகையிரத நிலையம் இருந்தது.

பல உள்ளூர் கிராமங்களிலிருந்து ஏழைப் பெண்கள் துறையூரில் மீன் வாங்கிச் செல்வதற்காகப் புகைவண்டிப் பிரயாணம் செய்து நெல்லியூர் நிலையத்தை வந்தடைவார்கள்.

நெல்லியூர் புகையிரத நிலையத்திற்கும் துறையூர் துறைமுகத்திற்குமிடையிலுள்ள பௌத்த சமயமடம், கிறிஸ்தவ தேவாலயங்கள், பிள்ளையார் கோவில், பள்ளிவாசல், இத் தனையும் காணும் பொழுது அத்தனை பெண்களும் தங்கள் தங்கள் தலையிலுள்ள மீன்கடகத்தை இரு கரங்களாலும் தலைக்கு மேலாக உயர்த்தித் தங்களுக்குள் தாங்கள் முணு முணுக்கத் தவறமாட்டார்கள்.

* * *

அன்று பொன்னியின் வியாபாரம் இலாபமீட்டவில்லை. காரணம் அவள் ஏலத்தில் வாங்கிய மீன் அத்தனையும் அவளை ஏமாற்றிவிட்டது. சட்டத்திற்குப் புறம்பான முறையில் "டைன மைற்" வைத்துப் பிடித்த மீன்கள் அவை. குறிப்பிட்ட நேரம் வரையில் பதங்கெடாத அம்மீன்கள் பின் பதங்கெட்டு... பொன்னிக்கும் அன்று கிடைத்தவை அத்தகைய மீன்களே.

செல்லாச்சியிடம் பட்ட கடன் காசைக் கொடுக்காவிட் டால் அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்தெடுக்கப் போகிறாளே' எப்படி அவளுக்கு மறுமொழி சொல்வது?

அன்று ஒரு கடகம் நாறிய மீன் சடலங்கள் பொன்னியின் வீட்டுக் கோடியில் வெட்டிப்புதைக்கப்பட்டன. அவளுடைய வீட்டில் அன்று சாக்களை கோட்டியது. அடுப்புப் புகைய வில்லை.

"இவ்வளவு நாளா மீன் யாவாரஞ் செய்யிற எனக்கு மீனின்ரை பதம் தெரியேல்லையே?"

அப்போது படலையைத்திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்த செல்லாச்சியைக் கவனித்த பொன்னி வாய் எடுப்பதற்கிடையில் செல்லாச்சியே முந்திக் கொள்கிறாள்.

"என்ன பொன்னி அக்கா தாறியோ?"

"காசைப் பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருக்கிறம், பிரண்டு போவாங்கள் வெடிவைச்சுப் பிடிச்ச மீனை கட்டி அடிச்சு விட்டாங்கள். அவ்வளவும் உன்னாணை கோடிக்கை தாட்டுக் கிடக்கு."

"உதுதான் எனக்குப் பிடிக்காது. நாணயத்துக்கு சீலை கட்டவேணும். காசை வை."

"உன்னாணை என்ரை வீட்டிலை இண்டைக்கு உலை வைக்கேல்லை. நாளைக்கு இந்நேரம் உன்ரை காசை வைக் கலாம் பேசாதை."

பொன்னி நாணிக் குறுகினாள்.

"போக்கிலியளோடை கொடுக்கல் வாங்கல் வைச்ச எனக்கு இதுவும் வேணும், இன்னும் வேணும்."

குலையாத முந்தானையைக் குலைத்துச் சொருகிக் கொண்டு படலையை நோக்கி நடக்கிறாள் செல்லாச்சி.

இந்த வார்த்தைகள் பொன்னியின் புருஷனுக்கு உறைக் காவிட்டாலும். உடம்பை வருத்தி உழைக்கும் பொன்னியின் தன்மானத்தைக் கிளறிவிட்டன.

"இஞ்சா, உன்ரை காசை நாளைக்கு எறியலாம். வீண் கதை பேசாதை."

பொன்னியின் பாணம், படலம் வரையும் சென்ற செல் லாச்சியை அவ்விடத்திலேயே தடுத்து நிறுத்தியது.

"பின்னை என்ன உதுவுமொரு யோக்கியமான கதையே?"

"உனக்கெப்படி வந்தது யோக்கியம்?"

"நான் எப்பவும் யோக்கியமாய்த்தான் இருக்கிறன்"

"உதை வேறையாருக்காவது போய்ச் சொல்லு, உன்ரை யோக்கியம் மேன் கொழும்புக்குப் போன பிறகு வந்ததெண்டு எங்களுக்குத் தெரியும்." செல்லாச்சியில் மகன் கொழும்பில் உத்தியோகமானதும் தாயாரை மீன் வியாபாரத்திற்கு முழுக்குப் போடச் சொல்லியிருந்தான். அதைத்தான் பொன்னி தன் குத்தல் மொழிகளால் நினைவுறுத்துகிறாள்.

நாணயம் தவறாது வாழ்ந்த பொன்னியின் தன்மானத் திற்குச் செல்லாச்சியின் பேச்சு எரிகொள்ளியாயிருந்தது. எப்படியும் செல்லாச்சியின் கடன்காசையும் வட்டியையும் எறிந்துவிட வேண்டுமென்ற ஆவேசம் அவள் மனதில் எழுந்தது. அடுத்தநாள் சிறிது வழக்கத்திற்கு அதிகமாக மீன்வாங்கி விற்று விட்டால் செல்லாச்சியின் கடனை அடைத்துவிடலாம் என்று ஒரு நம்பிக்கை.

* * *

"இனிமேல், "டைனமைற்" வைத்துப் பிடித்த மீன்களை நான் வாங்கன், ஒரு தடவை படிச்சிட்டன்."

மீனை வழக்கத்திற்கு அதிகமாக வாங்குவதற்குப் பணத் திற்கெங்கே போவதென்று எண்ணும்போது அவளுடைய எண்ணத்தில் ஒரு பொருள் மின்னி மறைந்தது. அதுதான் அவள் மூக்கில் அணிந்திருந்த மின்னி.

பொன்னி, மின்னியைக் கழற்றிக்கொண்டு, தான் வாடிக் கையாக மீன் கொடுக்கும் வள்ளியம்மையிடம் செல்கிறாள்.

"பிள்ளை இந்த மின்னி முப்பது ரூபாயும் பெறாதெண்டு எனக்குத் தெரியும் ; இதின்ரை பெறுமதிக்கு காசு தரச் சொல்லி நான் கேக்கேல்லை. இதை ஒரு நம்பிக்கைக்கு வைச்சுக் கொண்டு எனக்காக ஒரு அம்பது ரூபாத்தா, நாளைக்குப் பின்னேரம் காசைத் தந்திட்டு மின்னியை எடுக்கிறன்."

* * *

மறுநாள் பொன்னி மீன் வாங்குவதற்காகத் துறையூருக் குப் புறப்பட்டாள். வழமைபோல் புத்த யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் மடம், மத ஆலயங்கள் அத்தனைக்கும் முன்னி

லையில் தனது வெற்றுக் கடகத்தை கைகள் கொண்ட மட்டும் நீட்டித் தலைக்கு மேலாக உயர்த்தித் தனக்குள் தியானித்துக் கொண்டே சென்றாள்.

அன்று துறையூருக்குப் போனதும் போகாததுமாக ஏலத்தில் புத்தம் புதியமீன்கள் மலிவாகக் கிடைத்தது அவள் அதிர்ஷ்டமோ...?

பொன்னியின் எண்ணம் தளிர் விடுகிறது.

வள்ளியம்மையிடம் ஈடுவைத்த மின்னி பொன்னியின் காலடிகளில் வந்துவிழுகிறது. செல்லாச்சி ஒரு தூசாக மாறி காற்றுடன் ஐக்கியமாகிறாள்!

"மீன் கோச்சிக்கும் இன்னும் ஒரு மணித்தியாலத்துக்குக் கிட்ட இருக்க என்னோடை வந்த ஒருத்தியும் இன்னும் மீன் வாங் கேல்லை. அவை மீன் வாங்குமட்டும் காத்து நிற்கிற நேரத் துக்கை, கால் நடையாக றயிலடிக்குப் போய்விட்டால் காசும் அம்பது சதம் மிச்சம்."

எண்ணத்த தளிரில் மூகை.

பொன்னி மற்றப்பெண்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு ஒரு கடகம் மீன் சுமையுடன் நெல்லியூர் புகையிரத நிலையத்தை நோக்கி நடக்கிறாள். வழமைக்கு அதிகமாக தலைச்சுமை அவளுடைய நடையின் வேகத்தைக் கட்டுப் படுத்துகிறது.

புகையிரத நிலையத்தைச் சமீபித்தபோது தான், தான் நேரத்தை பிழையாகக் கணித்துவிட்ட உண்மை புலனாயிற்று. கடகத்தின் கண்களிலிருந்து கசிந்துவந்த மீன் ஊனம் அவளு டைய தோள்களில் வீழ்ந்து அங்கு அரும்பிய வியர்வைத் துளிகளுடன் சங்கமமாகி, பாதி மறைந்த மார்பகத்தை முற்றாக நனைத்துவிட்டது. வேட்டை நாயைப்போல இளைக்க இளைக்க நடந்து கொண்டிருக்கும் போது தான் அந்த மணியோசை கேட்டது.

பொண்ணையும் சாடிய பொன்னியின் ஓலத்தைச் செவி மடுக்காமல் சென்றது அந்த இரும்புச் சக்கரங்கள். ஆனால் அரைமணி நேரமாகியும் இன்னும் அது அடுத்த ஸ்ரேசனை சென்றடையவில்லை. காரணம் புகையிரத நிலையத்துக்கு முன்பாகவிருந்த கைகாட்டி சாயவில்லை.

அந்த இரும்புக்கரத்தின் ஆணைக்கு அடிபணிந்த புகைவண்டி அப்பால் நகர அனுமதி கோரி "கூ கூ... " என்று ஓலமிட்டுக் கொண்டு நிற்கிறது. ஆனால், அந்த நேரம் பொன் னிக்கோ இந்த உலகப் பிணைப்பிலிருந்து விடுதலைபெற அனுமதி கிடைத்துவிட்டது.

~ **வீரகேசரி**
**25.01.1967**

# 08 உறுதி

"பெத்த வயிறு எரியுதடா, பெண்டில் பிறகே போவனே'" தாய் மகனை வாழ்த்தும் முறையில் ஒரு புதிய திருப்பம்.

'ஜேப்படிக்காரர்கள் நிறைந்திருக்கும் பட்டினத்தில் வாழவேண்டியிருக்கும் நான், பெண்டில் பிறகே போகலாம் முன்னாலை போனால், அவள் அணிந்திருக்கும் நகை நட்டுக் களையெல்லாம் அபேஸ் செய்துகொண்டு போனாங்களெண் டால் யாரைப்பிடிப்பது அம்மா? நீங்கள் காரணமாகத்தான் என்னை வாழ்த்தியிருக்கிறீர்கள், அதற்கு நன்றி, ஆனால் பெத்த வயிறு எரிந்தால் ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலம் குடித்தீர்களென் றால் எல்லாம் சரியாகப் போய்விடும்.' என்று நான் பதிலிறுத் திருக்கலாம். ஆனால் ' என்னைப் பெற்று, பெயரிட்டு அழைத்து ஆளாக்கியதெய்வம் ஏதோ ஆசாபாசத்தின் மேலீட்டால் அறிவுக் குறைவான முறையில் திட்டி விட்டாளென்று அவளை நிந்திப்பது தவறு, என்ற எண்ணத்தால் எதுவும் கூறாமல் இருந்துவிட்டேன்.

அம்மாவினுடைய இந்த ஆசீர்வாதத்தைப் பெற்று ஒன்றரை வருடங்கள் உருண்டுவிட்டன. என்றாலும் அந்நிகழ்ச்சி என் மனக்கண்முன் நிற்பதற்கும் நான் இந்த மருத்துவமனையின் வெளிவிறாந்தையில் நின்று "குட்டி போட்ட பூனை" போல் தவித்துக்கொண்டிருப்பதற்கும் நிறையத் தொடர்புண்டு.

அம்மாவின் கோபத்திற்கு இலக்காவதற்கு நான் செய்த தவறு என்னவென்றால், நான் மாலதியைக் கைப்பிடித்து வருடங்கள் பத்தாகிவிட்டனவாம். இன்னும் அவள் தாயாகப் போகும் அறிகுறியில்லாதபடியால், தன் ஒரே ஒரு மகன் அடிச்சுவடு இல்லாமல் அழிந்து விடுவானென்ற ஏக்கமாம் அதற்காக நான் இன்னுமொரு கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று என்னை வேண்டினாள் என் அன்னை' அவளுடைய தாய்ப்பாசத்தில் தவறிமுளைத்த மிருக ஆசைக்கு நான் தலை வணங்கவில்லையென்றுதான் அன்று என்னை அவ்விதம் வாழ்த்தினாள்.

ஆனால் இன்று. –

மாலதியின் கட்டில் அருகோடு காவலிருக்கிறாள் அம்மா. வெளியில் நிலைகொள்ளாமல் தவிக்கிறேன் நான்.

எண்ணம் கடிவாளமில்லாத குதிரையைப் போன்றது. எதிர்பாராதவிதமாக ஏதாவது ஒன்றில் வந்து முட்டிமோதிக் கொண்டு நின்றால் சரி, அல்லது அங்கும் இங்கும் அலைந்து கொண்டேயிருக்கும்.

* * *

அம்மா மணமுடித்து ஒன்பது வருடங்கள் கழித்தபின்பு தான் எங்களைப் பெற்றெடுத்தாளாம். அதற்கு முன் அம்மாவுக்கு ஆறு குழந்தைகள் குறைமாதத்தில் பிறந்து இறந்துவிட்டனவாம். கடைசியாக, கதிர்காமக் கந்தனுக்குத் தங்கத்தால் பிள்ளையும் தொட்டிலும் செய்துகொடுப்பதாக நேர்த்திக்கடன் வைத்துத்தான் நான் நிறைமாதத்தில் பிறந்ததாக அடிக்கடி சொல்லிப் பெரு மைப்பட்டுக்கொள்வாள் அம்மா. அருமையாகப் பிறந்த எனது அடி அழியக்கூடாதென்று அங்கலாய்த்த அம்மாவுக்கு கல்யா ணம் நடந்து எட்டு வருடங்களாக உருப்படியான ஒரு குழந்தை பிறக்கவில்லை என்ற காரணத்தால் அப்பா இன்னொரு கல்யாணம் செய்ய முற்பட்டால் தான் எப்படித் துடித்திருப்பா ளென்று அவளுடைய பெண் உள்ளம் உணரவில்லை.

எனக்கும் மாலதிக்கும் திருமணம் நடந்து மூன்று வருடங்களின் பின்தான் எங்களுக்குக் குழந்தை இல்லாக்குறை விளங்கத்தொடங்கியது. அதன்பின் ஏழு வருடங்களாக மாலதி தான் கேள்விப்படும் முறைகளையெல்லாம் பரீட்சித்துப் பார்த்து விட்டாள். கருவைச் சிதைக்கும் குணங்கொண்ட காய்கறி, பழ வகைகளை ஆசையிருந்து தொடமாட்டாள். திங்கள் விரதம், செவ்வாய் விரதமென்று பிடித்தவை போக அம்மா என்னைப் பெற்றெடுப்பதற்கு எடுத்த நேர்த்திக்கடனையும் வைத்துப் பார்த்துவிட்டாள். ஒன்றும் பலனளிக்கவில்லை.

ஒரு குழந்தையை எடுத்து வளர்த்தால் அப்புறம் குழந்தை பிறக்குமென்று யோசனை கூறினார்கள் பலர்: அப்படி வளர்ப்பதால் பிற்காலத்தில் நிம்மதியில்லா வாழ்க்கைக்கு ஆளாக்கிவிடுவோமென்று எச்சரிக்கை செய்தனர் சிலர்.

கடவுளின் புண்ணியத்தால் என்னுடைய வழியாலும் மாலதியினுடைய வழியாலும் வர்க்கவிருத்தி எண்ணிக்கையில் ஒரு டசினை எட்டிப்பிடித்து விட்டு, பராமரிக்க வழிதெரியாது தவித்துக்கொண்டிருந்தனர் பலர். அந்தக் குழந்தைகளில் ஒன் றைத் தத்துஎடுத்து வளர்த்திருக்கலாம். ஆனால், யார் வழிவந்த குழந்தையை எடுத்து வளர்ப்பது என்ற பிரச்சினையில் கருத்து வேற்றுமைகண்டு அதையும் கைகழுவி விட்டுவிட்டோம்.

காலம் செல்லச் செல்ல எங்கள் நம்பிக்கையின் இழை ஒவ்வொன்றாக அறுந்துகொண்டே வந்தது. எங்களுடைய எதிர் காலம் எங்கோ இனந்தெரியாத ஒரு சூனியத்தில் வழிதேடித் தத்தளித்தது.

இதைவிட, நாளிலும் பொழுதிலும் அம்மா வேறு நச்சரித்துக் கொண்டேயிருந்தாள். நேருக்கு நேராக என்னைத் தாக்கிவந்த அம்மா, மறைந்து நின்று மாலதிக்கு பாணம் தொடுக்கத் தொடங்கிவிட்டாள்.

ஒரு நாள் நான் வேலைத்தலத்தில் இருந்த சமயம் அம்மா, மாலதியை நேருக்குநேர் தாக்க தொடங்கிவிட்டாளாம். மாலதியும் எத்தனை நாட்களுக்குத்தான் பொறுப்பாள்? தற்காப் புக்காக ஏதோ கூறிவிட்டாளாம். அம்மா தம்வசமுள்ள 'மலடி'

யென்ற இறுதி அஸ்திரத்தைப் பாவித்துள்ளதுதான் தாமதம், மாலதி 'ஓ" வென்று அலறிக்கொண்டு படுக்கையில் சாய்ந்து விட்டாளாம்.

நான் வேலையால் திரும்பும்போது, மாலதி படுத்த படுக்கையாகவே இருந்தாள். கண்களிலிருந்து நீர் ஊற்றெடுத்துக் கொண்டேயிருந்தது. நடந்திருக்கக்கூடியதை ஒருவாறு ஊகித்தாலும், மாலதியை விபரம் கேட்டேன். அவள் பதிலே பேசவில்லை. பதிலுக்கு மேலும் அதிக கண்ணீரை இறைத்துக் கொண்டிருந்தாள். அம்மாவைக் காரணம் கேட்டால், மேலும் மாலதியின் உள்ளம் புண்படக்கூடியதாக ஏதாவது உளறிவிடுவாளென்ற அச்சத்தில் அம்மாவையும் ஒன்றும் விசாரிக்கவில்லை.

சொந்த ஊருக்கு வேலைமாறி வந்துபட்டது போதுமென்றாகிவிட்டது. அந்த ஊரிலே இருக்கும் வரைக்கும் உணவையே தொடமாட்டேனென்று சத்தியம் செய்துவிட்டாள் மாலதி.

அடுத்தநாள் வேலைத்தலத்துக்குச் சென்றதும் திரும்பவும் திருகோணமலைக்கு என்னை மாற்றிவிடும்படி எங்கள் அதிகாரியை மன்றாடினேன்.

"இவ்விடம் வந்து ஒரு வருடம் முடியமுன் திரும்பவும் திருகோணமலைக்குப் போக நிற்கிறீர். எதற்கும் உடனே எப்படிச் செய்வது? தலைமைக் காரியாலயத்துக்கு எழுதி அனுமதிபெற வேண்டாமா?" என்றார் அதிகாரி.

"சார் மாலதிக்கு இவ்விடச் சுவாத்தியம் ஒத்துக்கொள்ளுதில்லை. இங்கு வந்தநாட் தொடக்கம் நோயும் நொடியுமாகவே இருக்கிறாள். ஏதோ கருணை வைத்து இயன்றளவு கெதியில என்னைத் திருகோணமலைக்கு மாற்றிவிட்டீர்களென்றால் உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு."

"சரி சரி இன்றைக்கே தலைமைக் காரியாலயத்திற்கு எழுதிவிடுகிறேன். ஆனால் உமக்கு மாற்றம் கிடைக்க எப்படியும் மூன்று வாரமாவது செல்லும்."

"கடவுளே, மூன்று கிழமைகளுக்கு உணவில்லாமல் மாலதி எப்படி உயிர்வாழப் போகிறாள்? அவளைவிட்டு நான் எப்படிச் சாப்பிடுவது? சாப்பிடாமல் வேலை எப்படிச் செய்வது?" என்ற கேள்விகள் என்னைக்குடைய வீடு திரும்பினேன்.

மாலதி, தண்ணீரைத் தவிர உணவு எதுவும் உட்கொள்ள மாட்டேனென்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள். நானும் வேறு வழியில்லாமல், சுகவீனமென்று இரண்டு கிழமைகளுக்கு வைத் திய அத்தாட்சிப்பத்திரம் எடுத்து வேலைத்தளத்துக்கு அனுப்பி விட்டு, 'எள்ளுடன் சேர்ந்து எலிப்புழுக்கையும் காய்வதுபோல' மாலதியுடன் சேர்ந்து நானும் காய்ந்துகொண்டிருந்தேன். முதல் ஓரிரு நாட்களுக்கு வயிற்றைப்பசி பிடுங்கித்தின்றாலும் போகப் போகப் பழகிவிட்டது.

எங்கள் அதிகாரி கூறியவண்ணம் 21 நாட்களாலும் மாற்றத்திற்கு அனுமதி வரவில்லை. 23ஆவது நாள் தலைமைக் காரியாலயத்திலிருந்து ஒரு தந்தி வந்தது. அடுத்த நாளிலிருந்து திருகோணமலை காரியதிகாரி காரியாலயத்தில் வேலை பார மேற்கும்படி.

தந்தி கிடைத்த அன்று மாலை 6 மணிப் புகைவண்டி யில் புறப்பட ஆயத்தங்கள் செய்துவிட்டோம். இதற்குமுன் மூன்று வருடங்கள் வேலைபார்த்த இடமென்றபடியால், தேவை யான சமான்களையெல்லாம் அவ்விடம் போயே ஒழுங்கு செய்யலாமென்று எண்ணி ஒரு உடுப்புப்பெட்டியுடன் மட்டும் புறப்படத் தயாரானோம்.முத்தத்தில் மாலதியும் நானும் இறங்கும் போது அம்மா படலை அருகில் நின்றாள். நாங்கள் மெதுவாகப் படலையை நோக்கி நடந்து அம்மாவுக்குக் கிட்டச்சென்றதும் கால்கள் அப்பால் நகர மறுத்துவிட்டன' அம்மாவின் முகத்தை நோக்கினோம். இவ்வளவு காலமும் இரும்பாயிருந்த அம்மாவின் இதயம் இன்று உருகிக் கண்வழியாக வழிந்து கொண்டிருந்தது' அம்மாவைப்பார்த்து நானும், என்னைப்பார்த்து மாலதியும் அழுதேவிட்டோம். அழுகையின் மத்தியிலும் மாலதி என்னைப் பார்த்து பார்வையில் "புகைவண்டிக்கு நேரமாகப்போகிறது" என்று கருத்துத்தொனித்தது.

மாலதியைப் பார்த்து நான் அம்மாவுக்குப் "போய்விட்டு வருகிறோம்" என்று சொல்லும்படி கண்ணால் பேசினேன்.

"நாங்கள் போய்விட்டு வாறோம்" என்ற வசனத்தை முடிக்குமுன் மாலதி வாய்விட்டு அழுதேவிட்டாள்.

* * *

திருகோணமலைக்கு நாங்கள் வந்து ஆறுமாதங்கள் கழிந்துவிட்டன. மாலதி நான்கு மாதங்கள் முழுகவில்லை. அது பற்றி உடனடியாக அம்மாவுக்கு அறிவிப்பதை மாலதி விரும்பவில்லை. ஆனால் அதே மாதப் பிற்பகுதியில் அம்மா மாலதிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள்.

"மருமகளே மாலு, என்னை மன்னித்துவிடு நீ நாலு மாதங்களாக முழுகவில்லையென்று அறிந்தேன். இந்த நாட் களில் ஏறி இறங்குதல், பாரம்தூக்குதல், போன்ற கடினமான ஒரு வேலையும் நீ செய்யக்கூடாது. உனக்கு ஒத்தாசையாகச் சில மாதங்களுக்கு நான் உவ்விடம் வந்துநிற்கத் தீர்மானித்து விட்டேன். வருகிற சனிக்கிழமை காலை நீயும் ராசனும் ஸ்ரேசனுக்கு வந்து என்னைக் கூட்டிக்கொண்டு போங்கள். உனது மாமி"

அடுத்த சனியும் வந்துவிட்டது, அம்மாவும் வந்துவிட்டாள். அம்மா, மாலதியைக் கண்டதும் அவளைக் கட்டித்தழுவி "என்னை மன்னித்துவிடு மாலு" என்றாள்.

"ச்ச, நீங்கள் அப்படி ஒரு தவறும் செய்யவில்லை மாமி, உங்களாலைதான் எங்களுக்கு இந்தப்பாக்கியம் கிடைத்த தென்று இவருக்கு டாக்டர் சொன்னாராம். இருபத்து மூன்று நாட்களும் நாங்கள் இருந்த உபவாசம்தானாம். எங்கள் உடலில் ஒரு மாற்றத்தை உண்டாக்கிக் கெற்பம் தரிக்கச் செய்தது. அப்ப, மாமி இல்லாட்டில் இது கிடைக்குமா எங்க ளுக்கு" என்று மாலதி கூறி அம்மாவைத் தேற்றினாள்.

* * *

"என்ன வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர் மாலதிக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கு" என்று 'நர்ஸ்' வந்து கூறியபோதுதான் நான் இவ்வுலகிற்கு வந்தேன்.

" ஆ - ஆ - ஆ - ண் குழந்தையா?" என்று அங்கலாய்த்த வண்ணம், "தாயும் குழந்தையும் சௌக்கியமா" என்றேன்.

"குழந்தை சௌக்கியம்தான். தாய்க்கு இரத்தம் ஏற்ற வேண்டும்"

"இதோ என்னுடைய இரத்தம் இருக்கு ஏற்றலாமே" என்று கூறிக்கொண்டு, மாலதி பிரசவித்த அறையை நோக்கி நடந்தேன்.

"ஏதோ நேரே கொண்டுபோய் நீராக ஏற்றுகிற ஆளைப் போல் போகிறீர் முதல் அந்த அறைக்கு வாரும். உம்முடைய இரத்தம் மாலதிக்குப் பொருந்துமாவென்று பார்க்க" என்றாள் 'நர்ஸ்'

"என்னுடைய இரத்தம் பொருந்தாமலா மாலதிக்குக் குழந்தை பிறந்திருக்கு" என்று மனதுக்குள் பொருமிக்கொண்டு அவளைப், பின்தொடர்ந்தேன்.

பெருவிரலில் ஒரு ஊசியை ஏற்றி ஒரு சொட்டு இரத்தம் எடுத்து 'டாக்டரிடம்" கொடுத்தாள் 'நர்ஸ்' இரத்தத்தைச் சோதித்துப் பார்த்த டாக்டரின் முகபாவனை 'எனது இரத்தம் மாலதிக்குப் பொருந்தாது' என்று கூறிவிட்டது.

நானும் டாக்டரும் மாலதியின் அறையை நோக்கி நடந்துகொண்டிருக்கிறோம். அவசர அவசரமாக எங்களை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு 'நர்ஸ்' டாக்டரை இடைமறித்து காதுக்குள் ஏதோ சொன்னாள். டாக்டர் பரிதாபமாக என்னைப் பார்த்ததுதான் தாமதம், வாயுவேகத்தில் பாய்ந்து சென்றேன் என் மாலதியிடம். மருத்துவமனையின் சட்டதிட்டங்களுக்கு, என்னைத் தடுத்து நிறுத்தச்சக்தி ஏது?

என் மாலதியின் முகத்தை மூடியிருந்த வெள்ளைத் துகிலை நீக்கி அவளின் தாமரைமுகத்தில் கடைசி முத்த மிட்டுக் கதறினேன். என் மாலதி, பத்துவருடங்களாகத் தன்னுடன் ஒட்டிக்கொண்டிருந்த கறைபடிந்த நாமத்தை நீக்கிய நித்திரை யில் நிரந்தர நித்திரையில் ஆழ்ந்திருந்தாள்'

* * *

**மா**லதியின் மறைவுக்குப் பின் காலச்சக்கரம் நான்கு முறை உருண்டுவிட்டது. "மாலதியின் செல்வன்" - அதுதான் மாலதி எனக்கு அளித்துவிட்டுச் சென்ற செல்வனுக்கு நானிட்ட பெயர். அவன் மழலை மொழிபேசி என் உள்ளத்தை நிரப்பிக் கொண்டிருந்தாலும், அம்மாவின் இதயத்தில் மட்டும் ஒரு சிறு வெற்றிடம் இருண்டு கொண்டே வந்தது.

ஒரு நாள் அம்மா, "தம்பி, உன்ரை மாலதியின் செல் வனை எத்தினை நாட்களுக்குத்தான் என்னால் கவனிக்க முடியும்? எனக்கும் வயதாகிவிட்டது. நீ தொழிலுக்குப் போக வேண்டியவன்..." என்று இழுத்தாள்.

அம்மாவின் ஆலாபனம் எங்கேபோய் முடியுமென்று குறிப்பறிந்த நான் அவளை இடைமறித்து, "அம்மா என் மாலதியை என்னிடமிருந்து பறித்தெடுத்த மரணத்தினால் மட்டு மென்ன, உலகத்திலேயுள்ள எந்தச் சக்தியாலும் என் மாலதி பற்றி தூய எண்ணத்தை என் உள்ளத்திலிருந்து பிடுங்கியெடுக்க முடியாது. அவள் எனக்கு விட்டுச்சென்ற என் 'மாலதியின் செல்வன் அந்த எண்ணைச் சுவாலைக்கு எண்ணெய் விட்டுக் கொண்டேயிருப்பாள். அது ஒருபோதும் அணையாது. நீங்கள் இப்போது "பிள்ளை பிறகே போவானே'" என்று சபித்தாலும் என் உறுதி குலையாது அம்மா" என்று நான் கூறிமுடிக்க முன் "அப்பா" என்று தேனொழுக அழைத்துக்கொண்டோடி வந்து, என்மடியில் ஏறிக்கொண்டான் என் மாலதியின் செல்வன்.

அந்த வார்த்தை என்னுடைய உறுதிக்கு மேலும் பன்மடங்கு உரம் அளித்தது.

அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர்
சங்கம் நடாத்திய சிறுகதைப்
போட்டியில் ஆறுதல் பரிசு.

## 09———— நான் செத்துப் போனேன்

நான் செத்துப் போனேன். எனக்குப் பிள்ளைகள் மூன்று.

நாட்டு நிலைமையைச் சாட்டாக வைத்து, பணம் சம்பாதிக்கும் நோக்கில் மடை திறந்த வெள்ளம் போல் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் இளைஞர்களில் ஒரு வனாக மூத்தவன் முகுந்தனை பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டேன் - பொன்விளையும் செம்மண் தோட்டக் காணி பத்துப்பரப்பை அறாவிலைக்கு விற்று.

போனவன் நான்கு ஆண்டுகள் நன்றாக உழைத்து அடுத்தவன் சபேசனை கனடா நாட்டுக்கு அனுப்பி வைத்து விட்டேன். சபேசன், ஏ.எல் படித்துக்கொண்டிருந்த கடைக்குட்டி ரவீந்திரனின் படிப்பை இடைநடுவில் நிறுத்திவிட்டு, அவனைத் தன்னுடன் எடுத்துக்கொண்டு விட்டான்.

கடவுளேயெண்டு சாப்பாட்டுக்குக் குறைவில்லை.மூண்டு பெடியளும் பணம் அனுப்பும்போது.

"அப்பா, அம்மா, உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கோ, இந்தச் சத்துணவு வாங்கிச் சாப்பிடுங்கோ. அந்த ரொனிக் வாங்கிக் குடியுங்கோ..." என்று எழுதுகிற கடிதங்களை வாசிக் கும் போதே எங்கள் பாதிவருத்தம் பறந்துவிடும். ஆனால், சாரீர

உதவிக்குத்தான் ஆளில்லை. மனுசிக்குச் சக்கரைவியாதி. கடினவேலை எதுவும் செய்யமாட்டாள். கூட்டிற குப்பையைத் தாக்க ஒரு சின்னக் கிடங்கு வெட்டிற தெண்டாலும் தோண்டிச் செல்லையாவுக்கு நூறு ரூபா கொடுக்கவேணும்.

நானும் அறுபது வயது வரைக்கும் நல்ல சுகமாய்த் தானிருந்தேன். அறுபது வயது கழிஞ்சு ஒரு வருஷம் ஆகேல்லை. இருந்தால் போலை ஒளிச்சிருந்த கள்ளனைப் போலை மார டைப்பு என்னைத் தீர்த்துக்கட்டிவிட்டது.

நான் கச்சேரியிலை ஒரு சிற்றூழியனாகத்தானிருந் தனான். கலியாணப் புறோக்கர், மாப்பிள்ளை 'கிளாக்கர்' எண்டு சொல்லி ஏமாத்தி என்ரை மனிசிக்குக் கட்டி வைச்சுவிட்டான். நானும் கிளாக்கராக நடிக்கவேண்டி வந்திட்டுது. ஆனா மனிசிக்கு மட்டும் உண்மையைச் சொல்லிப்போட்டன்.

"இதை இரண்டாம் பேருக்கும் சொல்லவேண்டாம். வேலைக்குப் போகேக்கை லோங்ஸ் மட்டும் போட மறக்க வேண்டாம்" எண்டு மனுசி எனக்கு உத்தரவு போட்டுவிட்டாள்.

அப்படிப்பட்டவள் நான் செத்த பிறகு இலேசிலே விடுவாளா?

என் உயிரற்ற உடலுக்கு 'புல் சூட்" போட்டு, வீட்டு ஹோலின் மையப்பகுதியில் அலங்காரப்பெட்டியில் வைத்து, தலைமாட்டிலும் குத்துவிளக்கேற்றினாள்.

நாற்பது வருடங்கள் என்னுடன் இணைபிரியாமலிருந்த என் துணைவி என்னைப் பிரிந்துவிட்ட சோகத்தில், தலைமாட்டில் வெறுந்தரையில் ஒருகாலை மடித்து மறுகாலை நாடிக்கு முட்டுக்கொடுத்து வலது கையை தலையில் வைத்துச் சோகமே உருவாக அமர்ந்திருக்கிறாள்.

வாழ்க்கையில் என்னை வெறுத்த சிலரும், என்னை நேசித்த சிலரும் பேதமின்றி என்னை வாயாரப்புகழ்ந்து கொண்டிருப்பது என் காதுகளில் விழுகிறது.

போலிவேடம் போடும் சிலரின் முகத்திரையைப் கிழித் தெறிந்தால் என்ன? என்று என் மனதில் ஓர் எண்ணம் தோன்று கிறது. நான் செத்தெல்லவா போனேன் என்ற நினைவு வந்ததும் நாவை அடக்கிக்கொண்டேன்.

திடீரென என் மனைவியின் சகோதரன் குமார் விரைந்து வந்த தமக்கையிடம் கூறுகின்றான்.

" கனடாவிலிருந்து சபேசனின் கோல் வந்தது அக்கா.... தாங்கள் எவரும் இலங்கை வந்துபோக வசதிப்படாதாம். சிறப்பாக செத்தவீட்டை நடத்தட்டாம். காசு ஐம்பதினாயிரம் அனுப்பியிருக்காம்".....

என்ரை மனுசிக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்திட்டுது. அழுகையின் மத்தியில் "அப்ப ஆராம் கொள்ளி வைக்கிறது" என்றாள்.

"ஆதவனைக் கேட்டுப்பார்க்கட்டே?" என்றான் குமார்.

"....ஆ' என்ன அநியாய ஆலோசனை சொல்லுறான் மச்சான்' ஆதவன் என் ஒரே தங்கையின் ஏகபுத்திரன். அவனுக்கு வயது ஐந்தாயிருக்கும் போது, புருஷனை இழந்துவிட்டாள். அவளையும் மகனையும் என்னுடன் வைத்து ஆதரித்தனான். ஆதவனைப் படிப்பித்து, வேலையும் ஒன்று தேடிக் கொடுத்து, அவனுக்கு செய்துவைச்சன்.... அவனுக்கு ஆசை அதிகமாகி விட்டது. ஒரு நாள் என்னிடம் வந்து அங்கிள், சீவியத்துக்குச் சம்பளம் போதாமலிருக்கு. கொழும்பிலையிருந்து தைச்ச உடுப்புக்கள் தருவிச்சு, வியாபாரஞ் செய்ய யோசிக்கிறன். ஓர் இருபத்தையாயிரம் ரூபா தாருங்கோ ஒரு வருஷத் தாலை திருப்பித் தந்திடுவன்?" என்று உருக்கமாகக் கேட்டான்.

ஏதோ தங்கையின் மகன் தானே, நல்லாய் வரட்டும் என்று கேட்ட தொகையைக் குடுத்தன்.

ஒரு வருடம் இரண்டு வருடங்கள், மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. தாறன், தாறன் என்று அலைக்கழித்து வந்து,ஒரு நாள் என் மனதை வேக வைத்திட்டான்.

"...வேண்டினான்தான் உள்ள நேரந்தரலாம். போங்கோ வெளியாலை" என்று சொல்லிவிட்டான்.

நான் திகைத்துப்போனேன். உலகம் என்னைச் சுற்றி வலம் வந்தது. நிதானமடைந்து "....உந்தக் காசும் வேண்டாம். உன்ரை உறவும் வேண்டாமெடா. நான் செத்தாலும் என்ரை முகத்திலும் முழிக்கப்படாது. நான் சொல்லித்தான் சாவன்"என்று கூறிவிட்டு வந்து இப்ப அஞ்சு வருசமாச்சு. இந்த நன்றிகெட்ட வனைக் கொண்டா எனக்குக் கொள்ளி வைப்பிக்கப் போறாங் கள் என்று என் மனம் குமுறிக்கொண்டிருந்தது.

சிறிதுநேரத்தால் மச்சான் குமார் ஆதவனோடு ஏதோ கதைத்துவிட்டு, முகம் மலர எனது மனைவியை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

மச்சான் வளமாக வரட்டும்.... ஒரு பாடம் படிப்பிகிறன் என்று ஆயத்தமாக இருக்க, என்னுடைய கால்மாட்டுப்பக்கத்தில் மச்சான் வசதியாக வந்ததும், நான் செத்ததையும் மறந்து " என்ன வேலை செய்திட்டு வாறாய்" என்று கத்தியபடி எட்டி ஒரு உதைவிட்டன் அவனுடைய நாரியில்.

பக்கத்தில் படுத்திருந்த என் மனைவி "என்னப்பா கனவா கண்டியள்" என்று கூறிக்கொண்டே திடுக்கிட்டு எழும்பி என்னை உலுப்பினாள்.

நான் விழித்துக் கொண்டதும் வலது கால் பெருவிரலில் வலியெடுத்திருப்பதை உணர்ந்தேன். ●

- சஞ்சீவி சிறுகதை
24.01.1998

## 10 — விடை

சோதிடர் சோமசுந்தரம் அந்த ஊரில் பிரபல்யமானவர். பிற ஊர்க்காரர் ஒருவர் முதன்முதல் அவருடைய சோதிட நிலையத்தைத் தேடிச்சென்று, அந்த ஊர் எல்லையில் எவரை விசாரித்தாலும் சோமசுந்தரம் சோதிடநிலையம் அமைந்துள்ள இடத்தை அச்சொட்டாகக் கூறிவிடுவார்கள்.

நான் அந்தச் சோதிடநிலையத்தில் சிறிய சம்பளத்தில் வேலைபார்க்கும் ஒரு சாதாரண எழுதுநரும், நிலைய உதவியாளரும்.

சோதிடரின் எழுத்துச் சம்பந்தமான விடயங்களைச் கவனிப்பதுடன், அங்கு வருவோர் போவோரையும், அங்கு நடப்பவைகளையும் உன்னிப்பாகக் கவனிப்பதும் எனது சுபாவமாகிவிட்டது.

சோதிடரின் நாளாந்த வேலை அட்டவணை இது:-

காலையில் அவருடைய அலுவலக அறையிலுள்ள தெய்வப்படங்களுக்கு விளக்கேற்றி, ஊதுபத்தி கொளுத்தி, வணங்கி, திருநீறணிந்து கொண்டபின் தேநீர் அருந்துவார்.

அடுத்த முதல்வேலை அவருடைய மேசையில் வைக்கப்பட்டிருக்கும் அன்றைய தினசரியைப் பார்ப்பது.

வெள்ளிக்கிழமை நாட்களில் வாடிக்கையாளர் எண்ணிக்கை மிகவும் அதிகம். வாடிக்கையாளர் வந்த ஒழுங்கின்படி பொறித்த துண்டுகளை எடுத்தபின் வெளிவராந்தாவிலுள்ள வாங்குகளில் அமர்ந்துகொள்வார்கள்.

அன்று வாடிக்கையாளர் எவரையும் உள்ளே அழைக்க முன் சோதிடர் சமயக் கடன்களை முடித்துக்கொண்டு அன்றைய தினசரியை நோட்டம் விட்டுக்கொண்டிருக்க, நான் எனது இருக்கையில் அமர்ந்து எழுதிக்கொண்டிருந்தேன்.

இருந்தாற்போல பத்திரிகையில் ஒரு பகுதியைக் கிழித்தெடுக்கும் சத்தம் கேட்டது. உடனே நான் எனது கடைக் கண்களால் சோதிடரை நோக்கினேன்.

அவர் கிழித்தெடுத்த பத்திரிகைத் துண்டைக் கசக்கி மேசை அருகிலிருந்த ஊத்தைக் கூடையில் போட்டு, தினசரியை நான்காக மடித்து மேசையின் ஒரு மூலையில் போட்டுவிட்டுத் தான் தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருப்பதை மறைக்க முற்பட்டுத் தோற்றுப்போனார்.

திடீரென சோதிடர் என்னை அழைத்து "வெளியாலை எத்தனைபேர் இருக்கினம் என்று பார்த்து வாரும்" என்றார்.

பார்த்துவிட்டுத் திரும்பி வந்து நான் " அஞ்சு பேர் ஐயா" என்றேன்.

"எனக்குக் கடுமையான தலையிடியாயிருக்கு என்று சொல்லி, அவையளை நாளைக்கு வரும்படி அனுப்பிவிடும்' என்றார்.

வாடிக்கையாளரை அனுப்பிவிட்டுத் திரும்பிவந்த என்னை நோக்கி "நான் கொஞ்சநேரம் படுத்திருந்திட்டுவாறன்" நீர் எழுத இருக்கும் ஜனனக் குறிப்புக்களை எழுதும் என்று கூறிவிட்டுத் தன்னுடைய அறைக்குச் சென்றுவிட்டார் சோதிடர்.

சோதிடருக்குத் தலையிடியை உண்டாக்கிய விஷயம் என்னவாயிருக்கும் என்று அறிய என் மனம் துடித்தது.

மெதுவாக நான் எழுந்து, சோதிடர் கிழித்துக் கசக்கிய ஊத்தைக்கூடையில் போட்ட துண்டுக் கடதாசியை எடுத்து கங்கலை நீக்கி அதை வாசிக்க முயன்றபோது அதில் கண்டது இதுதான்.

"லொறிச் சாரதி விபத்தில் பலி"

வசந்தன், என்ற நபர் தான் கொள்முதல் செய்த லொறியின் கன்னி ஓட்டத்தில் அன்றே விபத்தில் பலியாகினார். 38 வயதுடைய இவருக்கும் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். ஓடு பாதையின் வளைவைக் கடக்கும்போது கட்டுப்பாட்டை இழந்த லொறி கொங்கிறீட் தூணுடன் மோதி விபத்து நேர்ந்தது.

எனக்கு நன்றாக ஞாபகம் வாட்டசாட்டமாக ஒரு இளைஞன் ஒரு வாரத்துக்கு முன் சோதிடரிடம் வந்தார்.

"ஐயா நான் லொறி எடுக்க யோசிக்கிறன். ஒரு நல்ல நாளாகப் பார்த்துச் சொல்லுங்கோ" என்றான்.

"தம்பியை இதற்கு முன் நான் பார்த்த ஞாபகம், எங்க இருக்கிறீர்?" என்று சோதிடர் கேட்க

"நான் நாகபுரத்தில் இருக்கிறன். வசந்தன் என் பெயர். இதற்கு முன்பும் நான் இங்கை வந்திருக்கிறன்" என்று அந்த இளைஞன் கூறினான்.

"அதுதானே எனக்கு அறிமுகமாயிருக்கென்று பார்த்தன்." எனக் கூறிக்கொண்டே சோதிடர் பஞ்சாங்கத்தை எடுத்து முன்னும் பின்னும் பக்கங்களைப் புரட்டி, ஒரு பக்கத்தில் பார்வையை நிறுத்திக்கூர்ந்து ஓரிரு நிமிடங்கள் பார்த்துவிட்டு, " தம்பி, இந்த மாதத்திலை ஒரேயொரு நாள் தானிருக்கு. 20 ஆந் திகதிக்குப் பிந்தாமல் வாகனத்தை வாங்கிப்போடும். 21ஆம் திகதி சரியாக மதியம் பன்னிரண்டு மணிக்கு வீட்டிலிருந்து வாகனத்தை வெளியாலை எடுத்துச்செல்லவேணும்" எனக் கூறிக்கொண்டே, மேசையின் வலதுபக்க லாச்சியைத் திறந்து, மஞ்சள் நூலால் நன்றாகக் கட்டிய ஒரு சிறிய சரையை எடுத்து வசந்தனுக்கு கொடுத்தார்.

"இதை உமது வாகனத்தின் 'ஸ்ரேறிங்'கில் கட்டிக் கொண்டுதான் வாகனத்தை ஓட்டத் தொடங்கவேணும்" என்று ஆலோசனை கூறினார்.

வசந்தன் தனது சேட் பக்கட்டிலிருந்து ஒரு நூறு ரூபா நோட்டை எடுத்துத் தனது இருகரங்களாலும் சோதிடரிடம் கொடுத்துவிட்டுப் பக்தி சிரத்தையுடன் தனது இருகரங்களாலும்

சோதிடர் கொடுத்த சரையைப் பெற்று கண்களில் ஒற்றி அதைத் தனது சேட் பாக்கட்டிலே வைத்துக்கொண்டு எழுந்து நின்றான்.

சோதிடர் தான் பெற்ற நூறு ரூபா நோட்டை சற்றே திறந்திருந்த மேசையின் வலதுபக்க லாச்சியில் திணித்ததும், வசந்தன் சோதிடரை நோக்கித் தனது இருகரங்களையும் கூப்பி வணக்கம் செலுத்திவிட்டு "நான் போட்டு வாறன் ஐயா" என்று கூறினான்.

"போட்டு வாரும் தம்பி" என்று சோதிடரும் விடை கொடுத்தார்.

~சஞ்சீவிச் சிறுகதை
21.03.1998

## 11 'லவ்' லேன்

பிரதான வீதியிலிருந்து கிளைவிட்டுச் சென்ற அந்த ஒழுங்கையின் . நிசப்பெயர் மங்கி மறைந்து, காரணப் பெயரான 'லவ்' லேன் என்ற நாமமே நிலைத்துவிட்டது'

அந்த ஒழுங்கை அமைந்துள்ள இடத்தை உங்களுக்குத் தெரியுமோ என்னமோ, பெதும்பை பருவமடைந்த பெரும் பாலான பெண்பிள்ளைகளுக்கும் ஒத்த வயதுள்ள இளைஞர் களுக்கும் 'லவ் லேன்' எங்கிருக்கிறதெனத் தெரியாமலிருக்க ஞாயமில்லை.

துரதிர்ஷ்ட வசமாக அந்தக் கண்றாவி லேனில் அமைந் துள்ள ஒரு வீட்டில் குடியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு.

வாழ்க்கையின் பெரும்பகுதியை ஓடிக்களைத்து இளைப் பாற என் இல்லத்தில் தரித்திருக்கும் எனக்கு, என் வாலிப வயதில் கண்டும் கேட்டுமிராத விந்தைகளைக் காணவேண்டிய நிர்ப்பந்தம்.

காலை உணவுக்காக பிரதான வீதியிலிருக்கும் கடை யொன்றில் அரை இறாத்தல் பாணும், இரண்டு வாழைப்பழங் களும் வாங்கிக்கொண்டு இந்த ஒழுங்கையால் திரும்பி எனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

அந்த ஒழுங்கையின் ஓரத்தில் எனது வீடு அமைந்துள்ள காணியின் எல்லைகளுக்கு உட்பட்ட இரு உருவங்கள்.

இருவரும் தத்தமது துவிச்சக்கரவண்டிகளின் கைபிடிகளை இறுகப் பற்றியவாறு, இருவருடைய வண்டிகளும் அவரவர்களின் வலப்புறங்களில் நிற்க, இருவருக்கிடையிலும், தடையேதுமின்றி அவர்கள் நெருக்கமாக நின்றது, அவர்கள் எதிர்த் திசையிலிருந்து வந்து ஒன்று கூடியிருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்தியது.

நான் அவர்களைக் கடக்கும்போது அந்த இளைஞன், வேண்டுமென்றே எனக்குக் கேட்கக்கூடியதாக "அம்மாவுக்குச் சொல்லும், போன கிழமை வர நேரமில்லாமல் போச்சு வாற கிழமை கட்டாயம் வாறனெண்டு" எனக்கூறியது தாங்கள் கள்ளக் காதலர்கள் அல்லர் என்று நம்பக்கூடிய ஒரு முட்டாள் நான் என்ற எண்ணத்தில் தான்.

அவன் பேசத் தொடங்கியதும் அவர்களின் முகங்களை நான் கவனிப்பதற்கு ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது.

பெண்பிள்ளையின் முகத்தையே முதல் நோக்கினேன். கவிஞர்கள் அழகிகளின் முகத்தை மாதுளங்கனிக்கும் ஒப்பிடுவதில் கருத்துண்டு என எண்ணியவாறு அடுத்தாற் போல் இளைஞனின் முகத்தை நோக்கியதும், மனிதனின் பரிணாம வளர்ச்சி பற்றிய டார்வினின் தத்துவத்தில் உண்மை இருக்கக் கூடும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. அப்படியிருந்து இவள் அவனை விரும்பியது 'காதலுக்கு கண்ணில்லை என்பதனாலா?

சிந்தித்தவாறே சோடிகள் நின்று கொண்டிருந்த இடத்துக்கு அண்மையிலிருந்த எனது வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வீட்டினுள் பிரவேசித்து, பாணையும் வாழைப் பழத்தையும் வைத்து விட்டுத் திரும்பவும் முற்றத்துக்கு வந்தேன்.

இப்பவும் அவர்கள் பேசுவது இலேசாகக் காதுகளில் விழுந்தது. அந்தச் சோடிகளுக்கும் எனக்குமிடையில் உயரமான தகர வேலியிருந்தது. பார்வையை மறைத்த அந்த

வேலிக்கு ஒலியைத் தடுக்கமுடியவில்லை. இவர்கள் என்ன தான் கதைக்கிறார்கள் என்று அறியவேண்டும் என்ற எண்ணம் வேடிக்கையாக என்னுள் தோன்றியது.

நான் செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு, சோடிகள் நின்று உரையாடும் பக்கத்து வேலியண்டை சென்றேன்.

"நான் சத்தியமாய் தற்கொலை புரிவேன்"

அந்தப் பெண்பிள்ளையின் வார்த்தைகள் தெளிவாக என் காதுகளில் விழுந்த மறுகணம், துவிச்சக்கரவண்டிகளை உருட்டும் சப்தம்கேட்டது. வேலியின் சிதைந்த பகுதியால் மெதுவாக எட்டிப் பார்த்தேன். பையன் பிரதான வீதிப் பக்கம் செல்ல, பெண்பிள்ளை என்வீட்டுப் படலையை நோக்கி எதிர்த் திசையில் வந்துகொண்டிருந்தாள். எனது வீட்டுப் படலைக்கு அருகில் வந்ததும் நான்.

"தங்கச்சி இங்கை வாரும்" என்று உள்ளே அழைத்து விறாந்தையிலிருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டி" இதில் ஒரு நிமிடம் இருந்து, நான் சொல்வதை அமைதியாகக்கேளும். நீர் கூறவேண்டியதை எனது கதை முடிந்தபிறகு சொல்லலாம்" எனக் கூறியதும் அவள் நாற்காலியில் அமர நான் தொடர்ந் தேன்.....

"தாய் தந்தையர் ஒரு பிள்ளையைப் பெற்று, பாலூட்டிச் சீராட்டி வளர்த்து, நோயுற்றபோது துடிதுடித்து மருந்தூட்டிக் குணமாக்கி, கல்வி புகட்டி, ஆளாக்கி, கற்றோர் அவையில் முந்தியிருக்கச் செய்து, பொருத்தமான வாழ்க்கைத் துணைத் தேடித் தருகினம். இப்படி எத்தனை தன்னலமற்ற தியாகங் களைச் செய்யும் முன்னறி தெய்வங்களை மறந்து, பருவ உளைச்சல்களுக்கு அடிமையாகி ஊர் பேர் தெரியாத ஒரு பையனின் பகட்டு வார்த்தைகளில் ஏமாந்து, காதல் தோல்வி யுற்றால் சாதலே ஒரு வழியென்று தற்கொலை புரியுமளவுக்குப் போகலாமா? இதுதான் பெற்றோரின் தியாகங்களுக்கெல்லாம் பிள்ளைகள் செய்யும் கைமாறா? தங்கச்சி, இது சரியாக, நீதியாகத் தோன்றுகிறதா உமக்கு?..."

அவள் திகைப்புற்றது போல் தோன்றியது.

"ஐயா நீங்கள் என்ன சொல்லிறியள்?" என வியப்புடன் கேட்டவாறு என்னை நோக்கினாள்.

"சற்று முன்னர்தானே தங்கச்சி, நீர் 'சத்தியமாய் நான் தற்கொலை புரிவேன்' என்று உம்முடன் கதைத்துக் கொண்டு நின்ற இளைஞனுக்குச் சொன்னதும், அவன் உடனே சைக்கிளை எடுத்துக்கொண்டு போனதும் பொய்யா?....."

"அதுவா ஐயா? 'கண்ணாரக் கண்டதும் பொய் காதாரக் கேட்டதும் பொய். தீர விசாரித்தறிவதே மெய்" என்று சொல்லுறு திலை எவ்வளவு உண்மை இருக்கு பார்த்தியளா?... நேற்று 'கறன்ட்' தாற நாள் தானே ஐயா' ரீ.வியிலை ஒரு நல்ல படம் போட்டாங்கள், அந்தக் கதையைச் சுருக்கமாக அவருக்குச் சொல்லிக்கொண்டிருந்த போது, அதில் வாற கதாநாயகி தன் கணவனுடன் சண்டையிட்டுக் கொண்டு, 'சத்தியமாய் நான் தற்கொலை புரிவன்" எனச் சொன்னாள் என்று நான் கூறி முடிக்க முன் அந்தப் பையனின் தகப்பன் தூரத்தில் வருவதைக் கண்டதும் 'அப்பா வாறார்" என்று மெதுவாகக் கூறிக்கொண்டே சைக்கிளை எடுத்துக்கொண்டு அவர் புறப்பட நானும் அந்தள வுடன் நிறுத்திப்போட்டு வாறன் ஐயா..." என அவள் கூறிய தும், நான் அவள் முன் கூனிக்குறுகிப் போனேன். இருந்தும் ஒரு பொதுப் பாதையில் தனிமையாக ஒரு இளைஞனுடன் நின்று மணிக்கணக்கில் கதைத்துக் கொண்டிருக்கத் துணிவுள்ள ஒரு பெண்பிள்ளைக்கு இப்படிக் 'கயிறு திரிக்க' தெரியாமலா இருக்குமென்றும் எனக்குள் நினைத்துக்கொண்டேன். ●

~ சஞ்சீவி
10.10.1998

# வேதனைகள்

# 12——————— காப்பாற்றப்படுகின்றன

கணக்காளர் கனகசபை அந்தக் காரியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்து நான்கு வருடங்கள் அவருக்குத் தெரியாமலே ஓடிவிட்டன. இந்த நான்கு வருடங்களும் அவர் சம்பாதித்த நற்பெயர்களோ ஏராளம்.

ஒழுக்கசீலர்,<br>
கடவுள் பக்தர்,<br>
கண்ணியவான்,<br>
கடமையில் கண்ணானவர்,

நடுநிலையாளர் இத்தியாதி பொக்கிஷங்களும் இந்த நான்கு வருடங்களில் அவர் சம்பாதித்தவை.

நேற்றுவரை 'அக்கவுண்டன் ஐயா" என்று தங்கள் தலை களில் தூக்கிவைத்து சிற்றூழியர் கூட இன்று....

அவரைக் காணும்போது ஏளனப்பார்வை<br>
அவர் மறைந்ததும் 'குசு குசு' பேச்சு

நமண்டல் சிரிப்பு. இந்த மாற்றத்தைக் கணக்காளரும் அவதானிக்கத் தொடங்கிவிட்டார். காரணத்தையும் ஓரளவு புரிந்துகொண்டார்.

நிதிவருடமுடிவில் வரவு - செலவுக் கணக்குகளைச் சமன் செய்வதில் ஏற்படும் சிக்கல்களையும் தவறுகளையும் நொடிப் பொழுதில் கண்டுபிடித்துத் தீர்த்து வைக்கும் கணக்காளருக்குத் தன் சொந்த வாழ்க்கையில் குறுக்கிட்ட களங்கத்தைக் கழுவ முடியாமல் தவிக்கிறார்.

நிதிவருட முடிவில் நெருங்கிக் கொண்டிருந்தது.ஊழியர் முற்பணக் கொடுப்பனவுகள், வசூல் கணக்குகள் நிலுவையில் இருந்தன. அன்று அலுவலகம் மூடுவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக கணக்காளர் கனகசபை கணக்குக்கிளைக்கு வந்து,

"நாளைக்கு பொதுவிடுமுறை, எனக்கும் வேலை யிருக்கு, யாரும் இருவர் நாளைக்கு வேலை செய்யமுடியுமா?" என வினவினார்.

ஊழியர் ஒருவருக்கொருவர் கசமுசு திரும்பவும் கணக்காளர்,

"ஓவற்ரைம் தரமுடியாது ஹொலிடே பே தாறன்"

"..............."

"நான் வாறன் சார்" நளாயினியின் குரல்

"இன்னுமொருவர்" கணக்காளர்.

"சரி நானும் வாறன்"முற்பண வேலை பார்க்கும் அகிலன்.

"முருகேசுவையும் வரச்சொல்றன், அவர் கந்தோர் திறப்பை எடுத்துக்கொண்டு வருவார். வேலை செய்யுங்கோ" என்று கூறிக்கொண்டே கணக்காளர் கனகசபை தான் சிறை வைக்கப்பட்டிருக்கும் கண்ணாடிக் கூண்டினுள் புகுந்துவிட்டார்.

மறுநாள் காலை கணக்காளர் கனகசபை அலுவலகத் தினுள் பிரவேசிக்கும்போது, நளாயினி கடமையிலீடுபட்டுக் கொண்டிருந்தாள். முருகேசு அக்கவுண்டன் ஐயாவைக் கண்டதும் தன் இருக்கையை விட்டு எழுந்து நிற்கிறான்.

"அகிலன் இனிமேல்தான் வருவாராக்கும்" என்ற எண்ணத்துடன் தனது கூட்டினுள் நுழைந்துவிட்டார் கணக்காளர். சிறிது நேரங்கழித்து கணக்காளரின் கூட்டிலிருந்து மணியோசை வெளிவந்தது.

முருகேசு உள்ளே சென்றான்.

"அகிலன் ஐயாவை வரச்சொல்லு" அக்கவுண்டன்.

"இன்னும் வரேல்லை ஐயா" முருகேசு.

"சரி வந்ததும் வரச் சொல்லு"

"சரி ஐயா"

ஒரு மணி நேரம் ஓடிவிட்டது. நடந்து வந்த ஒருவன் முருகேசுவிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். கணக்காளரிடம் கையளிக்கும்படி.

கடிதத்தில் கண்டது,

கணக்காளர்,

ஐயா, ஒரு மரணச்சடங்கில் கலந்துகொள்ள வேண்டி நேரிட்டதால் அலுவலகத்திற்கு வரமுடியவில்லை. மன்னிக்கவும் அகிலன்.

சுவரில் விழித்துக்கொண்டிருந்த கடிகாரத்தின் இரு முட்களும் பன்னிரண்டில் ஒன்றையொன்று சந்தித்தன.

நாளாயினி தனது மதிய உணவுப் பார்சலை எடுத்துக் கொண்டு உணவு உண்ணும் இடம் நோக்கிச் செல்வதைக் கண்ட முருகேசு, கணக்காளரின் கூட்டுவாசல் சென்று,

"சாப்பிட்டிட்டு வாறன் ஐயா" என்றான்.

"முருகேசு சாப்பிட்டு விட்டு வரும்போது சரஸ்வதி பவானிலை எனக்கு ஒரு பார்சல் எடுத்துவா" என்று கூறியவாறு அதற்குரிய பணத்தையும் கொடுத்தார் கணக்காளர்.

"முருகேசு அலுவலகத்தைவிட்டுச் சென்றபின் கணக் காளரின் சிந்தனையில், அந்தநேரம் அலுவலகத்தில் தானும் நளாயினியும் மட்டுமே இருக்கிறோம்' என்ற எண்ணம் எதேச்சை யாக வந்து மோதியதும் நெஞ்சு நிலைகொள்ளாமல் தவித்தது.

சுமார் 45 நிமிடங்கள் கழித்து முருகேசு உணவுப் பார்சலுடன் அலுவலகம் திரும்பியபோது நளாயினி தனது வேலையை கவனித்துக் கொண்டிருந்தாள். உணவுப் பார்சலுடன் முருகேசு கணக்காளரின் கூட்டுக்குள் நுழையும் அரவம் கேட் டதும், கதிரையில் சாய்ந்தவாறு கண்களை மூடிக் கொண்டிருந்த கணக்காளர் 'வந்திட்டியா?' என்று கூறியபடி உணவுப் பார்சலை பெற்றுக்கொண்டார்.

மறுநாள் காலை அலுவலகத்தில், சும்மாயிருந்த ஊழியரின் வாய்களுக்கு அவல் கிடைத்துவிட்டது. முருகேசுவை துளைத்தெடுக்கத் தொடங்கினார்கள்.

தட்டெழுத்தாள் தயாளன் "என்ன முருகேசு நேற்று ஹொலிடே பேய்க்கு யார் யார் வேலை செய்தியள்?" என்று நக்கல் விட "அக்கவுண்டனும் நளாயினியும் ஓவரைம் செய்தவை" என்று இடைமறித்த ரைப்பிஸ்ற் கோகிலா கூற "முருகேசுவை சாப்பாடு எடுக்க அனுப்பிப்போட்டே ஓவரைம் செய்தவை" என்று குறும்புக்காரன் கோணேஸ் கூறவும் எல்லோரும் 'கொல்' என்று சிரிக்க முருகேசு இரு காதுகளையும் பொத்திக்கொண்டு அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டான்.

"தீரஅறியாமல் ஏன்ரா அப்பா பாவத்தைத் தேடுகிறியள்" என்று கேட்டுக் கொண்டே, அவ்விடம் வந்த 'ஸ்ரோகீப்பர்' தனபாலன் தன்னை ஒரு நிதானவாதியாகக் காட்டிக்கொள்ள முனைந்தான்.

"ஒரு ஆணும் பெண்ணும் ஒரு மணிநேரம் தனியாக ஒரு கந்தோரிலை வேலைசெய்தால் ஆர்தான் ஐமிச்சப்பட மாட்டினம் இது 'வாச்சர்' கார்த்திகேசுவின் நுண்ணறிவின் வெளிப் பாடு.

அதுதானே கிணத்திலை இருக்கிற தவளை தண்ணி குடிச்சுதோ குடிக்கேல்லையோ எண்டு ஆருக்குத் தெரியும். இது சைக்கிள் ஓடலிசைமனின் கண்டுபிடிப்பு.

அலுவலகத்தில் நடைபெறும் குசுகுசு பற்றி கணக்காளருக்கும் நளாயினிக்கும் கூடத் தெரியவந்துவிட்டது. நளாயினி கணக்காளரின் அறைக்குச் சென்று 'ஓ'வென்று கதறிய வண்ணம் "இது என்ன அநியாயம் சார், என்னை ஏன் ஹொலிடேயிலை வேலைசெய்யச் சொன்னீங்க? நீங்க என்ரை தகப்பனைப் போலை ஒருத்தரை வைத்துக் கதை கட்டிறாங்களே பாவியள், நான் இருந்தாலென்ன செத்தாலென்ன" என்று விசும்பினாள்.

கணக்காளர் கனகசபையின் அறையிலிருந்த மின்விசிறியைப் போல் சுற்றியது அவருடைய தலை. இருந்தும் பொறுமையாக,

"நளாயினி உணர்ச்சி வசப்படாதே, உண்மை ஒரு போதும் அழிந்ததேயில்லை. தற்காலிகமாக மறைந்திருந்தாலும், இறுதியில் வெளிவந்தே தீரும். ஒருவன் தவறு இளைக்காது இருந்துவிட்டால் மட்டும் போதாது. தவறு நடக்கமுடியாது என்ற நம்பிக்கையை உலகத்துக்கு ஏற்படுத்தும் வகையில் அவன் நடந்துகொள்ளவேண்டும். அந்த முன்னெச்சரிக்கையில்லாமல் நடந்தமையால் நாம் அடையும் துன்பமும் நிரந்தரமானதல்ல. நீங்கள் உங்கள் ஆசனத்துக்குப் போங்கள் உண்மை என்றும் நிலைக்கும்" எனக் கூறிவிட்டு கணக்காளர் சிந்தனையில் மூழ்கி விட்டார்.

* * *

சுமார் 30 வருடங்களுக்குமுன் தான் பொது எழுது விளைஞர் சேவைக்குப் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு கண்டிக் கச்சேரியில் முதல் நியமனம் பெற்றதும், அவ்விடம் ஒரு நண்பர் மூலம் ஒரு குடும்ப வீட்டில் உணவும் உறைவிடமும் ஒழுங்குசெய்து கொண்டதும் அந்த வீட்டுக்காரரின் ஏகபுதல்வி தேவகி தனது வாலிபப்பசிக்கு இரை

யானதும் கண்டி, கச்சேரி கணக்குக் கிளையில் கடமைபுரிந்த நான் நான்கு வருடங்கள் முடிந்தவுடன் எழுதுவிளைஞர் நிர்வாக சேவை இரண்டாம் வகுப்பு போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றுக் கணக்குக்கிளையின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதும், பரீட்சையில்சித்தி, பதவியுயர்வு இவைகளைக் கேள்விப்பட்டதும் தந்தை குமாரவேலுவிடமிருந்து தனக்கு வந்த கடிதம்.

மகன் கனகசபைக்கு,

உனது பதவிஉயர்வுகள் பற்றி அறிந்து மட்டமற்ற மகிழ்ச்சி. உனது திருமணத்தை இனியும் காலந்தாழ்த்த முடியாது. நல்ல சாதகப்பொருத்தம், உனது அக்காவைக் கரைசேர்க்க 2 லட்சம் இனமாகக் கொடுக்கிறார்கள். உனக்கு மாளிகை போன்ற ஒரு வீடு, 25 பவுண் நகை, கல்யாணச் செலவுக்கும் 50,000/= ரூபா கொடுக்கிறார்கள். அடுத்தமாதம் 10 ஆம் திகதி எழுத்தை வைக்க ஏற்பாடு. ஒரு கிழமை லீவு எடுத்துக்கொண்டு வரவும். மிகுதி நேரில்.

- க. குமாரவேலு

தந்தையின் சொல்லை மந்திரமாக ஏற்று, தேவகியில் வாழ்க்கைக்கும் அவளுக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் எதிர்காலத்திற்கும் வழி செய்வதாகவும், தன்னை தன் தந்தையின் விருப்பப்படி நடக்கவிடும்படி தேவகியைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதும், அவள் தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளாதவரின் செப்புக்காசும் ஏற்க மறுத்ததும் பழைய கதை.

காலம் உருண்டது. கனகசபை தன் தந்தை காட்டிய பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டினான். தேவகிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததையும் கேள்வியுற்றான். தேவகி தன்னிடமிருந்து எந்த உதவியும் பெறமாட்டாள் என்பதை உணர்ந்த கனகசபை, மறுமுகமாக அவளினதும் அவளது குழந்தையினதும் தேவைகள் ஏதோ வழியில் கவனித்துக் கொண்டேயிருந்தான்.

அதேவேளை கனகசபையின் முயற்சி அவனின் விவேகத்திற்குச் கைகொடுத்தது. கணக்காளர் பரீட்சையிலும் முதல் தடவையிலேயே சித்திபெற்றுவிட்டான்.

"மனிதன் போடும் திட்டங்களைக் கடவுள் சிதைத்து விடுகிறார். கனகசபையின் சட்டப்படி மனைவியின் முதல் பிரசவம் குறைப்பிரசவமாகி, குழந்தையும் தாயும் அவரை வஞ்சித்துவிட்டார்கள்.

காலவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. கணக்காளர் கனகசபை அந்த வெள்ளத்தில் அகப்பட்ட நாணற்புல்லானார். தேவகி என்ற செழுமையான மண்ணில் தான் தவறுதலாகப் போட்ட விதை முளைத்துச் செழித்து வளர்வதை அறிந்து கொண்டிருந்தார். காலதேவனின் கண்ணூறுபட்டு தேவகி வனப்பும் பொலிவும் இழந்து, நோய்வாய்ப்பட்டு, மரணத்தின் கதவைத்தட்டும் நிலையை அடைந்துவிட்டாள். இந்நிலையை அறிந்த கணக்காளர் கனகசபை பிராயச்சித்தமாக அவளிடம் சென்றார்.

"நீங்கள் எதுவேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என் வயிற்றில் பிறந்த நளாயினிக்குத் தந்தை நீங்கள் தான் என்பதை நளாயினி உட்பட எவருக்கும் உங்கள் வாழ்நாள் உள்ளவரை தெரியப்படுத்தவேண்டாம்" அதை இன்றுவரை வேதனையுடன் காப்பாற்றி வருகிறார்.

**நவரசக்கதை**
**வீரகேசரி**

## 13 நிம்மதி அற்ற ஊரில்

சாவித்திரி இப்படிச் செய்வாளென்று நான் நினைத் தேனா?

"போகிற போகிற இடத்தில் பைத்தியம் பிடித்த மாதிரி இருக்கிறாயே, பணமும் பொருளும் இன்று வரும் நாளை போகும். இழந்ததை நாளைக்குத் தேடிக்கொள்ளலாம். இப்படி யோசித்து யோசித்து மூளையே பாதிக்கப்பட்டால் பிறகு என்ன செய்வது? ஏதோ போகவேண்டிய காலத்துக்கு போட்டுது, வரவேண்டிய காலமிருந்தால் வரும் யோசனையை விட்டுட்டு உன் அலுவல்களைக் கவனி"

என்று எவ்வளவோ ஆறுதல் வார்த்தைகள் தானே நான் கூறினேன்.

சாவித்திரியின் கவனக்குறைவால் இந்த இழப்பு ஏற்பட்டாலும், ஒரு வழியில் நானும் அதற்குக் காரணமாக இருந்துவிட்டேன் என்ற எண்ணத்தால் எனது கண்டிப்பு வரம்பு மீறவில்லை.

அன்று நான் வெளியில் போய்விட்டு வீடு திரும்பிய போது, வீட்டு மூலையெங்கும் பதட்டத்துடன் எதையோ அவள் தேடுவதுபோல் தோன்றியது. என்னைக் கண்டதும்

தனது பதட்டநிலையை மறைப்பதற்கு அவள் பிரயந்தனப் படுகிறாள் என்பது பளிச்சிட்டது. அதை நான் பொருட்படுத் தாததுபோல் சாவதானமாக,

"என்ன தேடுகிறாய்?"

"ஒன்றுமில்லை" என்று கூறிக்கொண்டே சாவித்திரி குசினிக்குள் நுழைந்துவிட்டாள்.

'ஷேட்டை'க் கழற்றி கொடியில் போட்டுவிட்டுக் குசினிப் பக்கம் நான் போனபோதும், சாவித்திரி அருங்கிருந்த றாக்கைத் தட்டுகளில் போத்தல்களை விலத்தி விலத்தி எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

"என்ன சாவித்திரி தேடுகிறாய்? ஏன் நான் அறியக் கூடாதா?" என்றேன்.

"மறைக்கிறதுக்கு என்ன இருக்கு, காலமை கத்தறினா கிழவியின்ரை செத்தவீட்டுக்குப் போட்டு வந்து தாலிக் கொடி யைக் கழட்டி வைச்சனான், அதைத்தான் பார்க்கிறன்"என்று அவள் கூறி முடிக்குமுன், நான்-

""சரி வைச்சா வேறையெங்கை போகிறது, ஆறுதலாப் பாக்கிறதுக்கு நீயே இப்ப கத்திறேன் என்கிறாயே'" என சிலேடையாகக் கூறினேன்.

மதமாற்றத்தால் உருவாகிய சில பெயர்கள் உருமாறி எப்படி வேடிக்கையாக உச்சரிக்கப்படுகின்றன. என ரசித்த என்னை, சாவித்திரி தொடர்ந்த மறுவார்த்தைகள் ஏங்க வைத்தன'

"செத்தவீட்டாலை வந்து கிணத்தடியில் குளிக்கேக்கை அங்கை தான் தாலிக்கொடியைக் கழட்டி வைச்சனான் போலை கிடக்குது. அங்கை காணேல்லை அதுதான் இஞ்சை வேறை யெங்கையாவது வைச்சிருப்பேனோ எண்டுதான் தேடுறன்"

என்று சாவித்திரி கூறியதும் எனக்குப்பகல் வெள்ளிகள் தெரிந்தன.

"உங்கைதான் இருக்கும் வேறெங்கை போகப்போகுது தேடிப்பார், நானொருக்கா வெளியாலை போட்டுவாறன்"

என்று கூறிவிட்டு எனது துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு திருநெல்வேலியை நோக்கி விரைந்தேன் என்னைப் பிடித்த சனியனை நினைத்த வண்ணம்.

சாவித்திரி மரணவீட்டால் வந்து குளித்துவிட்டு அடுத்த வீட்டிற்கு ஏதோ அலுவலாய் போய்விட்டாள். எங்கள் வீடு அமைந்திருந்த ஒழுங்கையில் ஏதோ அரவங்கேட்டு படலையை நீக்கி நோட்டம் அறிந்தேன், ஒரு நடுத்தர வயதுள்ள மாது, மருட்சியுடன் பாதையில் இருபுறமும் நோட்டம் விட்டவாறு முன் சேலையைச் சற்றே பக்கவாட்டில் பிடிக்கவும் ஒரு துவிச்சக்கர வண்டி வீதியால் அந்த ஒழுங்கையில் திரும்பவும் சரியாக விருந்தது. கணப்பொழுதில் அவள் சேலையைக் கைவிட்டு சாதாரணமாக நடப்பதுபோல் பாசாங்கு செய்தாள்.

நான் பாவம் பெண் தொலைவிலிருந்து ஏதோ அலுவலாக வந்திருக்கவேண்டும். இயற்கை உபாதையைக் கழிக்க அவசரப்படுகிறாள் என்பதை ஊகித்தறிந்து,

"அம்மா இப்பிடி வாருங்கோ, கூச்சப்படமால் கிணத்தடியில் அடைப்பு கட்டியிருக்கு போயிற்று வாங்கோ" எனக் கூறி எங்கள் கிணற்றடியைக் காட்டிவிட்டு முன் விறாந்தையில் வந்து அமர்ந்துவிட்டேன்.

"தாங்ஸ் ஐயா, எங்கள் சொந்த ஊர் காங்கேசன்துறை கடந்த குண்டுத்தாக்குதலின்போது அதில் அகப்பட்டு எங்கடை அவர் செத்திற்றார். கச்சேரியிலை ஏ.ஓ வாக இருந்தவர்...

இடைமறித்த நான், "என்ன பெயர்" என்றேன்.

செந்தில்வேல், நானும் எங்கள் ஒரேயொரு மகளும் இடம்பெயர்ந்து வந்து திருநெல்வேலி வீரபத்திரர் கோவிலுக் கருகில் இருக்கிறம், இவருடைய நட்டஈடு பற்றி விசாரிக்கத் தான் கச்சேரிக்கு வந்தனான். குறிப்பறிந்து நீங்கள் செய்த உதவிக்கு நன்றி"

என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டாள்.

"உண்டவீட்டுக்கு இரண்டகம் செய்தாளே
அன்னமிட்ட வீட்டிலே கன்னக்கோல் வைத்தாளே"

"ஒரு பெண்தானே அவளும் நூலில் கோத்ததாலி அதகொண்டு போயிருக்கிறாளே" என்று சாபித்தவாறு, தேடிக் கண்டுபிடித்துவிட்டேன் அவளுடைய வீட்டை.

அவள் என்னைக் கண்டதும், வியப்புடன், "என்ன ஐயா" , சங்கதி? எப்பிடி வீடு கண்டுபிடிச்சியள்" என்றாள்.

"தாலிக்கொடியை விட்டுட்டு, சும்மா இருப்பேனென்று நினைச்சியா? என்று கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் விஷயத்தைக் குழப்பிவிட்டால் தாலிக்கொடி கைக்குவராது என்று எண்ணி நாவுக்கு பூட்டுப்போட்டு விட்டேன்.

"அம்மா, நீங்க எங்கள் வீட்டு கிணற்றடியை பாவிக்கிறதுக்கு சற்று முன்னர்தான் என்ர மனிசி ஒரு செத்தவீட்டுக்கு போட்டு வந்து தாலிக்கொடியைக் கழற்றி கிணற்றடியில் வைத்து விட்டு எடுக்க மறந்துவிட்டா. அது காணாமற் போவதற்கு வேறு மார்க்கமே இல்லை, தவறுதலாக அதை எடுத்து வந்துவிட்டீர்கள் போலிருக்கு"... என்றேன் நாசூக்காக.

"என்ன என்ன வலிய என்னைக் கூப்பிட்டு பழியைச் சுமத்தவா திட்டம் போட்டாய். என்னுடைய தாலியை இழந்த நான் உன்னுடைய மனைவியின் தாலியைக் களவெடுப்பேனா? அப்படி உன்னுடைய பெறுமதிமிக்க பொருளைக் கையாடிய பிறகும் என்னுடைய இருப்பிடத்தை குறிப்பாகச் சொல்லிவிட்டு வருவேன் என்று எண்ணக்கூடிய முட்டாளா நீ? என்னுடைய வீட்டுஅறைகள், பெட்டிகள் எல்லாம் திறந்துவிடுகிறேன். உன்னுடைய தாலிக்கொடி இருந்தால் எடுத்துக்கொண்டு போ" என்று பேயாக ஓலமிட்டால் அவள்.

"பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற நிலைமை எனக்கு. இருந்தாலும் இத்தனையையும் எதிர்பார்த்து திட்டமிட்டு ஏன் இவள் நடிக்கக்கூடாது என்ற நப்பாசை.

சாவத்திரிக்கு நடந்தவற்றைக் கூறி, பொலீஸில் புகார் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்மானத்துடன் வீடு திரும்பினேன்.

விசயமறிந்ததும் சாவித்திரி பத்திரகாளி ஆனாள்.

"துரோகி எத்தனை காலமாக இந்த விளையாட்டு? நானில்லாத இடத்தில் அந்நியப் பெண்ணை வீட்டில் ஏன் அடுத் தாய்? எனக்குக் கட்டிய தாலியை அவளுக்குக் கட்டிவிட்டாயா பாவி?" என்று ஒப்பாரி வேறு வைத்தாள்.

நான் என்னை இழந்துவிட்டேன், "சாவித்திரி" என்று வீடே அதிரக் கத்திய வண்ணம் எனது கரத்தை அவளுடைய இடது கன்னத்தில் பதித்துவிட்டேன்.

எனது முதலும் கடைசி அடியுமாகிவிட்டது அந்த அடி.

சாவித்திரி ஒரு இருதயநோயாளி என்பதும், இரவில் தூக்கமின்மைக்காக குளிகைகள் உட்கொள்பவள் என்ற எண்ணம் எனக்கு அந்நேரம் ஏற்பட ஏதுவில்லை.

இரண்டு நாட்கள் வீட்டில் சமையலுமில்லை. இருவருக் கும் உணவுமில்லை. மூன்றாம் நாள் சாவித்திரி தன்வசமிருந்த இருபதுக்கு மேற்பட்ட நித்திரைக் குளிகைகள் அத்தனையும் ஒரே தடவையில் போட்டு விழுங்கிவிட்டாள்.

* * *

அவளை இழந்து இன்று ஆறு மாதங்களாகி விட்டன.

மனத்திற்கு அமைதிதேடி எங்கள் வீட்டு வேப்பமரத்தின் கீழ் வந்தேன். ஒரு காக்கை என்மேல் எச்சமிட்டு பறந்தது. பார்த்த போது, ஒருகூடு அந்தக் காகக்கூட்டைப் பிய்ந்து எறிய வேண்டும். என்ற ஆத்திரம் எனக்கு. அந்த உச்சிக்குப் போனால் கொப்பு முறியக்கூடும். இந்தக் கொக்கைத்தடிக்கு எட்டக்கூடிய இடத்திலிருந்து அந்தக் கூட்டைப் பிய்ந்தெறிந்து விடவேண்டும் என முயற்சித்தேன்.

காகக்கூடு நிலத்தில் விழுந்தது. நான் செயல் இழந்தேன்.

பூமி என்னைத் தலைகீழாகச் சுழற்றியது.

சாவித்திரியின் உயிரை - அவளின் உயிரைக் குடித்த பொருளை ஆம் சாவித்திரியின் கழுத்தில் என்னால் கட்டப்பட்ட மாங்கல்யத்தை அங்கே கண்டேன்.

காகக்கூடு கட்டுவதற்கு பயன்படுத்திய சுள்ளிகள் செப்புக்கம்பிகளுடன் சாவித்திரியின் பத்தரை மாற்றுத் தங்கத் தாலியும் நூல்கொடியும் இருக்கக்கண்டேன். காகக் குஞ்சுகளின் எச்சப்படிமங்களையும் மீறி மின்னிக்கொண்டிருந்தது தாலி.

திருநெல்வேலி வீரபத்திரர் ஆலயத்தை நோக்கி, ஆறு மாதங்களுக்கு முன் எங்கள் கிணற்றடியைப் பாவித்த உத்தமியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற வெறியுடன் தாலிக்கொடியையும் எடுத்துக்கொண்டு விரைந்தேன்.

ஆ! என்ன...

அங்கே கோவிலையும் அதைச் சுற்றியிருந்த மூன்று நான்கு வீடுகளையும் கிடங்கும் கட்டட இடிபாடுகள் மட்டும் தெரிந்தன.

அந்த வழியால் வந்த ஒரு வயோதிபரை நோக்கி நான்.

"ஐயா· இதிலிருந்து வீரபத்திரர் ஆலயத்திற்கும் சுற்றியிருந்த வீடுகளுக்கும் என்ன நடந்தது?" என்று அலறினேன்.

"ஏன் நீர் நேற்றைய பேப்பர் பார்க்கேல்லையோ? தம்பி? முந்தநாள் போட்ட குண்டாலை வீரபத்திரர் கோவிலும் ஐந்து வீடுகளும் ஒன்பது ஆட்களும் சரி. அதிலை, காங்கேசன்துறையிலை குண்டுக்குப் புருஷனைப் பறிகொடுத்த ஒரு மனுஷியும் மகளும் இலங்கை இடம்பெயர்ந்து வந்திருந்தவை அவளும் சரி.


எனக்கு கண்கள் இருண்டன.

"தம்பி ஷெல் அடிக்கிறாங்கள் செல் வருது பாடுங்கோ....?"

எங்கோ தொலைவில் குரல் கேட்பதுபோல் இருக்கிறது எனக்கு.

அடுத்த நிமிடம் இருவர் இதில் நின்றார்கள் என்பதற்கு அடையாளமே இல்லாமல் போய்விட்டது.

- வீரகேசரி வாரமலர்
06.08.1995



# அணிந்துரை

ஈழத்துச் சிறுகதை உலகின் முழுமையான இருப்பினை அறிந்து கணிப்பதற்கு அத்துறையில் ஈடுபாடு கொண்டுழைத்த எழுத்தாளர்களின் எழுத்துக்களை நூலுருவில் கொண்டுவருவது அவசியமாகும். வாய்ப்பு வசதிகளற்ற எழுத்தாளர்கள் தமது முன்னைய ஆக்கங்களை நூலுருவில் வெளியிடாதுள்ளனர். அதனால், அப்படைப்புக்களைத் தேடிப் பெற்று நூலுருவாக்குகின்ற பணியில் யாழ் இலக்கிய வட்டம் ஈடுபட்டு வருகின்றது. முன்னைய ஆண்டுகளில் செஞ்சொற்செல்வன் ஆறு திருமுருகனின் உதவியுடன், தேவன் - யாழ்ப்பாணம், தையிட்டி அ. இராசதுரை ஆகியோரது சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டோம். இவ்வாண்டு ப. தெய்வேந்திரம் (கோபதி), க. பரராசசிங்கம் ஆகியோரது சிறுகதைத் தொகுதிகளை வெளியிடவுள்ளோம். இந்தச் செயற்பாடுகளுக்கு பாரதி பதிப்பக உரிமையாளரும், இலக்கிய அன்பரும், எழுத்தாளருமான இ. சங்கர் உதவ முன்வந்துள்ளார். அன்னாருக்கு முதற்கண் இலக்கிய வட்டத்தின் நன்றிகள்.

எழுத்தாளர் ப. தெய்வேந்திரம் (கோபதி) மிக அமைதியான படைப்பாளி. அவரது சிறுகதைகள் சமூக வாழ்வின் சலனங்களை ஆரவாரமின்றிப் பேசுவன. எளிமையான, இனிமையான உரைநடையில் அவற்றினைக் கூறிவிட அவரால் முடிகின்றது. படித்து முடித்துவிட்டு நிமிர்ந்து அமரும்போது அவர் கூறவிரும்பும் உள்ளடக்கமும், சமூகச் செய்தியும் மீண்டும் படிக்கவைக்கும் பாங்கானது. ஈழத்தின் மூத்த ஒரு படைப்பாளி. நாற்பது ஆண்டுகளாக எழுத்து யாகம் புரிந்துவருபவர். அவருடைய படைப்புக்கள் சிலவற்றையாவது அழியாது பேணி ஒரு தொகுதியாக வெளியிடும் வாய்ப்பு யாழ் இலக்கிய வட்டத்துக்குக் கிடைத்தமைக்கு அன்னாருக்கும், அதற்கு உதவ முன்வந்த பாரதி பதிப்பக இ. சங்கருக்கும் நன்றிகள்.

*75/04, பிறவுண் வீதி,* *செங்கை ஆழியான் க. குணராசா*
*யாழ்ப்பாணம்.*
*01.01.2008*